விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1620)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 24 திங்கட்கிழமை (08.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 079

ஆசிரியைக்கு தேநீர் கொடுத்து

## வீட்டிலிருந்த நகை, பணம் கத்தி முனையில் கொள்ளை

### கந்தர்மடம் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.கந்தர்மடம், மணல் தறை ஒழுங்கையில் ஓய்வுபெற்ற ஆசிரியை 19

## 24ஆம் திகதி திருமணம்; இளைஞன் நீரில் மூழ்கி பலி

### முல்லையில் சோகம்



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு நாயாறு கடல்நீரேரியில் மூழ்கி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். 19

இலங்கை மீதான பிரேரணை

# ஜெனிவாவில் 22 ஆம் திகதி வாக்கெடுப்பு

(ஜெனிவா) ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடரில், இலங்கை தொடர்பான பிரேரணை மீதான வாக்கெடுப்பு இம்மாதம் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.
(19ஆம் பக்கம் பார்க்க)

தீப்பந்தம் ஏந்தி

## யாழ்.நகரில் இன்று பேரணி

(யாழ்ப்பாணம்)
இலங்கை அரசால் தமிழ் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு, நீதி வேண்டி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாபெரும் தீப்பந்த 19

இலங்கைக்கு ஆதரவாக பல நாடுகள் இருந்தாலும்

# வாக்கெடுப்பின்போது நிலைமை மாறலாம்

## அச்சப்படுகிறது அரசு



(கொழும்பு)
ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் உரை குறித்த விவாதத்தின்போது இலங்கைக்கு ஆதரவாக பல நாடுகள் கருத்து வெளியிட்டன. ஆனால் வாக்கெடுப்பு என வரும்போது நிலைமை வேறுவிதமாகக் காணப்படலாம் என இலங்கையின் வெளிவிவகார செயலாளர் ஜயனத் கொலம்பகே அச்சம் வெளியிட்டுள்ளார்.
(19ஆம் பக்கம் பார்க்க)

கொரோனா

## 5 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளதாக சுகா 19

## ஆசிரியை, தாதி, கைதி உட்பட 6 பேருக்கு யாழில் கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கொரோனா ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் கொரோனாத் தொற்றாளர்கள் ஆறு பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் மூவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
அவர்களில் ஒருவர் யாழ்.சிறைச்சாலை 19

சர்வதேச நீதிமன்றில் முற்படுத்துக!

## தமிழ் சிவில் சமூகத்தினர் ஐ.நாவுக்கு மேன்முறையீடு

(யாழ்ப்பாணம்)
இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துவதை பூச்சிய வரைவுத் தீர்மானத்தில் உள்ளடக்க வேண்டுமென வலியுறுத்தி தமிழ் மக்கள் சார்பில் தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் 19

## அரசின் நிகழ்ச்சி நிரலில் முன்னணி செயற்படுகிறது

### முதல்வர் மணிவண்ணன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)
அரசின் நிகழ்ச்சி நிரலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி செயற்படு 19

நல்லூரில் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு

## விக்னேஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று ஆதரவு



(யாழ்ப்பாணம்)
பல்கலைக்கழக மாணவர்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட போராட்டம் மேலும் வலுப்பெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் என பாராளுமன்ற 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மதுபோதையில் சாரத்தியம்; வவுனியாவில் 7 பேர் கைது

(வவுனியா)

வவுனியாவில் மது போதையில் வாகனங்களைச் செலுத்திய 7பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி காமினி திசாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில், வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவினரால் நகரப் பகுதிகளில் நேற்று விசேட நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது மதுபோதையில் வாகனம் செலுத்துதல், மற்றும் வீதி ஒழுங்குகளை பேணாமல் வாகனம் செலுத்துபவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அந்தவகையில் மது போதையில் வாகனம் செலுத்திய 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களது வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இன்றையதினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா-299)

# விடுதியில் தங்கியிருந்தவர் திடீரென உயிரிழப்பு

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா விடுதியில் தங்கியிருந்த ஒருவர் திடீரென இறந்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு நடைபெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் கொழும்பு தெகிவளையைச் சேர்ந்த 48 வயது ஜெகநாதன் உதயராஜ் என்பவரே மரணமடைந்துளதாக தெரியவந்துள்ளது.

குறித்த நபர் திடீரென எவ்வாறு இறந்தார்? இவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனும் சந்தேகத்தில் மரணித்தவருக்கான பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்வதற்காக குறித்த நபரின் சடலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஞா-299)

யாழ்.கஸ்தூரியார் வீதியிலுள்ள

# வீட்டுக்குள் புகுந்து கும்பல் அட்டூழியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கும்பல் அட்டூழியத்தில் ஈடுபட்டு தப்பித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்துக்கும் மேற்பட்டோர் வீடு புகுந்து பெறுமதியான தளபாடங்களை அடித்து சேதப்படுத்தியும் தீவைத்தும் அட்டூழியத்தில் ஈடுபட்டுவிட்டுத் தப்பித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஞா)


## விற்பனைக்கு

யாழ்.பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் வடக்கு சந்தி 500 m தூரத்தில் பிரதான வீதியில் இருந்து மேற்குப் பக்கமாக 3ஆவது காணி 8 பரப்பு உடன் விற்பனைக்கு உண்டு.

075 543 2918, 077 323 7891


60 வயதுக்கு மேற்பட்டோருக்கு

# இன்றுமுதல் தடுப்பூசி

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு இன்று முதல் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் நாட்டிற்கு வழங்கப்படும் 20 சதவீதமான தடுப்பூசிகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நாட்டை வந்தடைந்தன.

தடுப்பூசியை இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே விமான நிலையத்தில் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதன்போதே 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு இன்று முதல் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொவிட் வைரஸ் நோயின் தாக்கம் அதிகமாக உள்ள பிரதேசங்களில் 60 வயதிற்கும் மேற்பட்டவர்களுக்கு இந்தத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஞா)

கொரோனாவினால்

# இரண்டு மாத குழந்தை பலி

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்டு கொழும்பிலுள்ள லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த பிறந்து 7 வாரங்களேயான குழந்தை நேற்று உயிரிழந்தது.

வெலிமடை பகுதியைச் சேர்ந்த குறித்த குழந்தைக்கு பதுளை வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஞா)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

(6041)

அமரர்

## முருகேசு செல்வமாணிக்கம்



கடந்த 07.02.2021இல் காலமான எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு ஓடி வந்து உடனிருந்து உதவிகள் செய்தோர், முகநூல், தொலைபேசியூடாக தங்கள் துயரங்களை பகிர்ந்து கொண்டோர், இறுதி நிகழ்வின் போது கலந்து கொண்டோர் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (09.03.2021) செவ்வாய்க்கிழமை காலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு : இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 08-09-1931

மறைவு 07-02-2021

"அமுத செல்வம்"
ஸ்ரீலங்கா பாடசாலை வீதி,
அல்வாய் வடக்கு.

021 226 2885

குடும்பத்தினர்

# இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த முடியாது- பிரித்தானியா திட்டவட்டம்

**(லண்டன்)**

**ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு போதுமான ஆதரவு இல்லாதமையினால் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ஐ.சி.சி.) பாரப்படுத்த முடியாது என பிரித்தானியா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.**

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு கோரி 13,500க்கும் மேற்பட்ட கையொப்பங்களுடன் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதிலளிக்கும் விதமாக பிரித்தானியா வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சியை நிறுவிய ரோம் சட்டத்தில் இலங்கை கையொப்பமிடவில்லை. ஐ.நா. பாதுகாப்புக் குழுவின் மூலம் மட்டுமே நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்க முடியும் என்பதுடன் அத்தகைய பரிந்துரையை வீட்டோ அதிகாரம் உள்ள நாடுகளே செய்யலாம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

பொறுப்புக்கூறல் மற்றும் இடைக்கால நீதிக்கு அரசாங்கம் உறுதிபூண்டிருப்பதாகக் கூறினாலும், பிரித்தானியா தொடர்ந்து, இலங்கை அரசாங்கத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

அதன்பிரகாரம் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச சட்டத்தின் கடுமையான மீறல்கள் தொடர்பான அனைத்து குற்றச்சாட்டுகளையும் விசாரித்து வழக்குத் தாக்கல் செய்ய இலங்கை அரசாங்கத்திற்கு பிரித்தானியா தொடர்ந்தும் அழைப்பு விடுக்கும் என்றும் அறிவித்துள்ளது.

மேலும் இலங்கையில் நிகழும் அனைத்து மீறல்கள் மற்றும் முறைகேடுகளுக்கும் ஒரு விரிவான பொறுப்புக்கூறல் செயல்முறையின் முக்கியத்துவத்தை பிரித்தானியா வலியுறுத்தும் என்றும் அறிவித்துள்ளது. (நி-4)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒருபோதும் இணைந்து செயற்படமாட்டோம்



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இனிவரும் காலங்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எந்த விடயத்திலும் இணைந்து செயற்படாது என கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட காலமாக தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற்று பாராளுமன்றம் சென்று வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது கடந்த தேர்தலின் போது சிறிய ஆட்டம் கண்டிருந்த நிலையிலும்கூட தற்போதைய அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு கூட்டமைப்பின் தலைவர் ஆதரித்து கையொப்பமிட்டு அரசுக்கு ஆதரவு வழங்கியுள்ளார்.

இது தமிழ் மக்கள் மீது மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதுகில் குத்திய ஒரு செயற்பாடாகும். எனவே இவ்வாறான தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு ஒற்றுமையை வலியுறுத்துவதற்காக அனைத்து கட்சியையும், இணைப்பதாக இனி எந்த சிவில் சமூகத்தினரோ மதகுருமாரோ முன்வர வேண்டாம்.

எனவே அவ்வாறான முயற்சிகளை கைவிட வேண்டும். அத்தோடு நாமும் பாராளுமன்றத்தில் அல்லது வேறு செயற்பாடுகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இன்றிலிருந்து சேர்ந்து பயணிக்க மாட்டோம் எனவும் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார். (நி-4-33)


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
25.08.1962

அம்பிகை அடியில்
19.02.2020

திருமதி
**ராதாதேவி ஜெயமனோகர்**
**(பழுத்தான்)**

ஆண்டு ஒன்று போனதம்மா உன் அழியா நினைவில் அபலைகள் நாம்!
நீங்கா உன் நினைவில் நின் சொந்தங்கள் நினைக்க நினைக்க
நெஞ்சம் ஆறுதில்லையம்மா!

**9.3.2021 நாளை செவ்வாய்க்கிழமை மதியம் 11.30 மணிக்கு எம் இல்லத்தில் நடைபெறும் எம் இதயத்தெய்வம் ராதாதேவி ஜெயமனோகர் அவர்களின் ஓராம் ஆண்டு ஆன்ம சாந்திக் கிரியைகளில் பங்கேற்று அவரது ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்தனை செய்யுமாறும் அதன்பின் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் பங்கேற்குமாறும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

மல்லிஓடை தூபியடி, தீருவில்,
வல்வெட்டித்துறை.

(c-1627)

இவ்வண்ணம்
கணவர் : செ.ஜெயமனோகர்
மகள்மார்: மதுரா, ரூபிகா
மகன் : பிரசாந்த்


# பாரதிய ஜனதா கட்சி பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்

## தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என பாகியங்கல ஆனந்த சாகர தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை பாரதிய ஜனதா கட்சி என்ற அமைப்பு உருவாக்கி ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியுள்ளது. இலங்கை யின் கட்சி அரசியலில் இந்தியா செல்வாக்கு செலுத்த ஆரம்பித்தால் பல பிரச்சினைகள் உருவாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிலும் இலங்கையிலும் பாரதிய ஜனதா என்ற கட்சி உள்ளதால் பொதுமக்கள் மத்தியில் குழப்பம் ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-4)


இளவாலை
வருத்தப்படாத
வாலிபர் சங்கம்

GIVE BLOOD
FOR THOSE WHO GIVE LIFE

உதிரம் கொடுப்போம்
உயிர்காக்க ....

Save a life
Give Blood

இளவாலை J/155 மற்றும் யூதாதேயு
இளைஞர்கழகங்களின் ஆதரவோடு

17 வது இரத்ததான முகாம்

காலம் :- 13.03.2021 [சனிக்கிழமை]
நேரம் :- காலை 08.30 மணி முதல்
இடம் :- இளவாலை புனித யூதாதேயு
ஆலய முன்றல்

பொது மக்கள் அனைவரையும் திரண்டு வருகை தந்து இவ் அறப்பணியில்
பங்கு கொள்ளுமாறு அழைத்து நிற்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 077 046 3491 ,076 753 6289,077 541 7659

(6057)

## வெற்றியுடன் தொடரை கைப்பற்றி

# ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது இந்தியா



**இங்கிலாந்து அணிக்கெதிரான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில், இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 25 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றி ஐ.சி.சி.டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்கு இந்திய அணி முன்னேறியுள்ளது.**

ஜூன் 10 ஆம் திகதி லோட்ஸ் மைதானத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியில், இந்திய அணி நியூஸிலாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.

அகமதாபாத் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 205 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பென்ஸ்டோக்ஸ் 55 ஓட்டங்களையும் டேனியல் லோரன்ஸ் 46 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், அக்ஸர் பட்டேல் 4 விக்கெட்டுகளையும் அஸ்வின் 3 விக்கெட்டுகளையும் சிராஜ் 2 விக்கெட்டுகளையும் வோஷிங்டன் சுந்தர் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி, 365 ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரிஷப் பந்த் 101 ஓட்டங்களையும் வோஷிங்டன் சுந்தர் ஆட்டமிழக்காது 96 ஓட்டங்களையும் ரோஹித் சர்மா 49 ஓட்டங்ளையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், பென்ஸ்டோக்ஸ் 4 விக்கெட்டுகளையும் ஜேம்ஸ் ஆண்டர்சன் 3 விக்கெட்டுகளையும் ஜெக் லீச் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 160 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, 135 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 25 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டேனியல் லோரன்ஸ் 50 ஓட்டங்களையும் ஜோரூட் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில், அஸ்வின் மற்றும் அக்ஸர் பட்டேல் ஆகியோர் தலா 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம், ஒரு தொடரொன்றில் ஒரு போட்டியில் தோல்வியடைந்து மீதமுள்ள போட்டிகளை வெற்றிகொண்ட ஆறாவது தொடரின் வெற்றியாக இது பார்க்கப்படுகின்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ரிஷப் பந்த் தெரிவுசெய்யப்பட்டார். தொடரின் நாயகனாக அஸ்வின் தெரிவு செய்யப்பட்டார். (4)

# சுவிட்சர்லாந்து ஓபன் பட்மின்டன்; இறுதிப்போட்டியில் சிந்து

2019 ஆம் ஆண்டு உலக சம்பியன்ஷிப்புக்கு பிறகு சிந்து இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்று இருப்பது இதுவே முதல்முறையாகும்.



சுவிட்சர்லாந்து ஓபன் பட்மின்டன் போட்டி பாசெல் நகரில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த அரை இறுதியில் உலக சம்பியனான இந்திய வீராங்கனை பி.வி.சிந்து, டென்மார்க்கின் மியா பிளிச்பெல்டை சந்தித்தார். 43 நிமிடம் நடந்த இந்த ஆட்டத்தில் சிந்து 22-20, 21-10 என்ற நேர்செட்டில் பிளிச்பெல்டை தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

2019 ஆம் ஆண்டு உலக சம்பியன்ஷிப்புக்கு பிறகு சிந்து இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்று இருப்பது இதுவே முதல்முறையாகும். ஆண்கள் ஒற்றையர் அரை இறுதி ஆட்டம் ஒன்றில் முன்னாள் நம்பர் வன் வீரரான இந்தியாவின் ஸ்ரீகாந்த் 13-21, 19-21 என்ற நேர்செட்டில் டென்மார்க் வீரர் விக்டர் ஆக்சல்செனிடம் தோல்வி அடைந்து வெளியேறினார். (4)

# ஐ.பி.எல்.கிரிக்கெட் தொடர் ஏப்ரல் 9 இல் ஆரம்பம்

2021 ஐ.பி.எல்.கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி தொடங்கவுள்ளதாக பி.சி.சி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியா - இங்கிலாந்து இடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் மார்ச் 28 ஆம் திகதி முடிவடைகிறது.

அதைத்தொடர்ந்து ஏப்ரல் 9 ஆம் திகதி ஐ.பி.எல்.கிரிக்கெட் போட்டி தொடங்கி, மே 30 ஆம் திகதி முடிவடையவுள்ளது.

போட்டி நடைபெறும் திகதி மற்றும் மைதானங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் அடுத்த வாரம் நடைபெறவுள்ள ஐ.பி.எல். ஆட்சி மன்ற குழு கூட்டத்தில் இறுதி செய்யப்படும் என பி.சி.சி.ஐ.நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சென்னை, டில்லி, கொல்கத்தா, அகமதாபாத், பெங்களூர் ஆகிய நகரங்களில் ஐ.பி.எல். போட்டி நடைபெறும் எனவும் தகவல் வெளியாகியது.

முன்னதாக மும்பையில் மட்டுமே ஐ.பி.எல்.போட்டியை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், அங்கு இப்போது கொரோனா வேகமாக பரவி வருவதால், அங்கு போட்டியை நடத்தும் முடிவில் இருந்து பி.சி.சி.ஐ.பின்வாங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (4)

## டெஸ்ட் தரவரிசையில் இந்தியா முதலிடம்




இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3-1 என்ற கணக்கில் இந்தியா வென்றுள்ளது.

இதன்மூலம் தொடர்ச்சியாக ஏழு வெற்றிகளுடன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தரவரிசைப்பட்டியலில் இந்திய அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.


இங்கிலாந்து அணிக்கு எதிராக நேற்று முன்தினம் அகமதாபாத்தில் நடைபெற்று முடிந்த நான்காவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்றது. இதன்போதே இந்தியா இந்த நிலையைப் பெற்றுள்ளது. (4)

ஐக்கிய நாடுகள் சபையின் 46 ஆவது மனித உரிமைக் கூட்டத்தொடர் தற்போது நடந்து வரும் நிலையில், தமிழினப் படுகொலைக்கு நீதி கேட்டு அனைத்துலக சுயாதீன விசாரணையை வலியுறுத்தி ஐ.நா. முன்பு அண்மையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் சுவிஸிலுள்ள ஈழத் தமிழர்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.



# எளிமையான வாழ்வு வாழ்ந்த உயர் பண்பாளர்

## மறைந்தார் மாண்பு



சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்களின் சிரேஷ்ட புத்திரன் துரைசாமி தேவேந்திரா அவர்கள் இன்று நம்மோடு இல்லை.

இயற்கை எழுதிய- மாற்ற முடியாத நியதியாக இருப்பது இறப்பு அதனால்தான்இறப்பு ஒன்றுதான் மனிதனின் பிறப்புரிமை என்றார் இந்தியாவின் முன்னாள் பிரதமர் நேரு அவர்கள்.

எனினும் துரைசாமி தேவேந்திரா அவர்கள் இந்த மண்ணில் 91 ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்தவர்.

இந்த நாட்டின் உயர் கௌரவத்திற்குரிய குடும்பத்தில் பிறந்த தேவேந்திரா மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர் என்பதுதான் இங்கு நோக்குதற்குரியது.

சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்கள் இந்த நாட்டின் தமிழ் அரசியல் பெருந்தலைவர்களில் ஒருவராக விளங்கியவர்.

இலங்கையின் சட்டசபை, நிரூபண சபை ஆகியவற்றின் உறுப்பினராக 26 ஆண்டுகளும் சட்டசபை சபாநாயகராக 11 ஆண்டு களும் பதவி வகித்தார்.

இலங்கையின் சபாநாயகராக இருந்த ஒரே தமிழர் என்ற பெருமை சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்களுக்கு உரித்தாயிற்று.

1937 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டின் முடிக்குரிய மகாராணியார் வைத்திலிங்கம் துரைசாமி அவர்களுக்கு சேர் பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

செல்வச்செழிப்பும் அரசாட்சியில் உயர் பதவியும் பிரித்தானிய ஆட்சியாளர்களின் செல் வாக்கும் மிகுந்திருந்த சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்கள் தமிழ் மீதும் சைவசமயத்தின் மீதும் அளவு கடந்த பற்றுக் கொண்டிருந்தார்.

இந்துபோட் அமைப்பினூடாக வடபுலத்தில் அவர் ஆரம்பித்த பாடசாலைகள் ஏராளம். தமிழ் மக்களின் கல்விக்காக அவர் ஆற்றிய அரும்பணி தமிழ் மக்களை கல்வியின்பால் உயர்வுற வைத்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றின் முகாமையாளராக இருந்து அந்தக் கல்லூரிகளின் வளர்ச்சியிலும் எழுச்சியிலும் சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்கள் காத்திரமான வகிபங்கை ஆற்றியிருந்தார்.

வேலணை மண்ணில் ஆரம்பிக்கப்பட்ட சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயம் இன்று வேலணை மத்திய கல்லூரியாக பெயர் மாற்றம் பெற்றிருந்தாலும் அந்தக் கல்லூரி ஆற்றிவரும் அளப்பரிய கல்விப் பணியின் மூலகர்த்தாவாக விளங்கியவர் சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்கள்.

இவ்வாறாக இந்த நாட்டின் உயர் கௌரவத்திற்குரிய சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்களின் மூத்தமகனாக 1930 ஆம் ஆண்டு தேவேந்திரா துரைசாமி அவர்கள் பிறந்தார்.

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுர சதுக்கத்தை அண்மித்திருந்த சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்களின் மகேந்திரா இல்லம் இந்த நாட்டினதும் வெளிநாட்டினதும் தலைவர்களின் வருகையால் வரலாற்றுப் பெருமைக்குரியதாயிற்று.

ஆம், இந்திய தேசபிதா மகாத்மா காந்தி அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த போது அவர் யாழ்ப்பாணத்திலுள்ள சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்களின் மகேந்திரா இல்லத்தில் தங்கியிருந் தார் என்பது இங்கு குறித்துரைக் கப்பட வேண்டிய வரலாற்றுப் பதிவாகும்.

மகாத்மா காந்தியடிகளைச் சந்திக்கவும் அவரோடு உரையாடவும் அவருக்கருகில் இருக்கவும் கூடிய பெரும் பேறுபெற்றவர் தேவேந்திரா அவர்கள்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அண்ணல் காந்திய டிகள் மகேந்திரா இல்லத்தில் தங்கியிருந்ததுடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் உரையாற்றினார் என்ற வரலாற்றுப் பெருமையும் யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரம் அமைந்த சதுக்கத்திற்கு உரித்தாயிற்று.

இவற்றை நினைவூட்டும் வகையில் மகாத்மா காந்தி வீதி ஒருபுறமும் சேர் வைத்திலிங் கம் துரைசாமி வீதி இன்னொரு புறமுமாக அமைந்து கடந்த கால வரலாற்றின் பெருமையை உரைத்து நிற்கின்றன.

இவ்வாறானதொரு குடும்பத்தில் பிறந்த தேவேந்திரா அவர்கள் தீவகத்தின் பழந்தமிழ்ப் பண்பாட்டின் தலைத்தீவாய் விளங்கும் மண்டைதீவின் விதானையாராகவும் சப்த தீவுகளின் தலைமை விதானை யாராகவும் பதவிவகித்த மு.நவரட்ணராஜா தில்லைநாயகி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வி சிதம்பரராணி அவர்களைத் திருமணம் செய்து மண்டை தீவின் மருமகனாய் உறவுப்பலத்தை மேலும் உயர்த்திக் கொண்டார்.

எளிமையான வாழ்க்கை, எல்லோரையும் மதிக்கின்ற மாண்பு, இன்சொல் அன்றி வேறு சொல் அறியா பண்புடைமை என்பன அவரின் அணிகலன்களாயின.

தனது தந்தையார் வகுத்த வழிகாட்டலைப் பின்பற்றி அவரால் தனக்குத் தரப்பட்ட கிளிநொச்சி பரந்தன் பிரதேசத்தில் அமைந்துள்ள விவசாயப் பண்ணையைப் பொறுப்பேற்பதற்காக நியூட்டன் டிக்கோயா தேயிலைத் தோட்டத்தின் துரைப்பதவியைத் துறந்து 1957 ஆம் ஆண்டு இங்கு வந்தார்.

கிளிநொச்சி பரந்தனில் தனது விவசாயப் பண்ணையைப் பொறுப்பேற்ற தேவேந்திரா அவர்கள் அப்பிரதேசத்தின் விவசாய அமைப்பு மற்றும் கூட்டுறவு அமைப்பு என்பவற்றின் தலைமைப் பதவியை ஏற்று அந்தப் பகுதி மக்களுக்குப் பெரும் பணியாற்றினார்.

அவரின் முன்மாதிரியும் அவரின் விவசாயப் பண்ணையும் கிளிநொச்சி பரந்தன் விவசாயிகளுக்குப் பெருந்துணையும் உதவியுமாய் அமைந்தன.

அவரின் நான்கு பிள்ளைகளில் மூத்தமகள் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் அவர்கள் வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராக இருந்து தமிழ்மக்களுக்கு அரும்பணியாற்றியவர் என்ற பெருமையும்தந்தை தேவேந்திராவுக்கு கிடைக்கப் பெற்றது.

நல்லூர்க் கந்தப்பெருமான் மீது ஆராப்பக்தி கொண்ட தேவேந்திரா அவர்கள் இந்த மண்ணில் 91 ஆண்டுகள் நிறைவு வாழ்வு வாழ்ந்து ஆயிரம் பிறைகண்ட அண்ணலாய்05.02.2021அன்று நல்லூர்க் கந்தப் பெருமானின் திருப்பாதங்களைச் சென்றடைந்தார்.

அவரின் எளிமையான வாழ்வும் அவரிடம் மிகுந்திருந்த அன்பும் அரவணைப்பும் என்றும் நம் நினைவுகளோடு காலமெல்லாம் வாழும்.

ந.விஜயன்


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 20.11.1955

உதிர்வு 07.02.2021

கடந்த 07.02.2021 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்

## குகஞானசோதி பேரானந்தம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் (09.03.2021) செவ்வாய்க்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். அந் நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் துண்டுப்பிரசுரம், பதாகைகள் மூலமும் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.07B, 2ஆம் ஒழுங்கை, மகாறம்பைக்குளம்.

(6045)

தகவல்: குடும்பத்தினர்



# 12ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 1993.05.31

மறைவு 2009.08.03

அமரர்

## குமாரசாமி சங்கீர்த்தனன்

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவன்

பத்து மாதங்கள் உனைச் சுமந்து பார் போற்ற நீ வருவாய் என நினைத்து
பதினாறு வயது வரை வளர்த்த போது எங்கிருந்தோ வந்த குண்டு
எம் பாலகனை பதம் பார்த்ததுவோ!
ஐயா! சங்கீர்த்தா எம் அன்பு மகனே
குடும்பத்தின் குல விளக்கே இன்றோடு நீ மறைந்து
12 ஆண்டுகள் பாகாய் உருகியதே!
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எம் துன்பம் என்றென்றும்
உம் நினைவுகளைச் சுமந்த படி நகர்கிறது எம் வாழ்வு.
உன் ஆத்மா சாந்தியடையட்டும்

(6034)

2ம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு.

077 552 8816
077 135 5460

தகவல்: குமாரசாமி குடும்பத்தினர்.

# கொரோனா தொற்றுத் தொடர்பான சமூக அச்சம் அகலும் காலம் கனிந்துள்ளது

## மருத்துவர் சி.யமுனாநந்தா

(யாழ்ப்பாணம்)

**கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக உலகை அச்சுறுத்தி வந்த கொவிட்-19 தொற்று தொடர்பான சமூக அச்சம் அகலும் காலம் கனிந்துள்ளதாக மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.**

உலகளாவிய கொரோனாத் தொற்று பரம்பல் தொடர்பான தற்போதைய நிலை குறித்து ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக உலகை அச்சுறுத்தி வந்த கொவிட்- 19 தொற்று தொடர்பான சமூக அச்சம் அகலும் காலம் கனிந்துள்ளது. இதில் முதன்மையானது கொவிட்-19 இற்கு எதிரான தடுப்பு ஊசிகளின் செயல் திறனாகும்.

இன்று கொவிட் வைரஸ்க்கு எதிராக 19 வகையான தடுப்பு மருந்துகள் உலகின் பல பாகங்களிலும் பாவனையில் உள்ளன. இவை அடிப்படையில் நான்கு வகையினுள் அடங்குகின்றன.

தடுப்பூசி ஏற்றப்பட்டவர்களில் கொவிட் நோயிற்கு எதிரான நோயெதிர்ப்புச் சக்தி உருவாகின்றது. கொவிட் தடுப்பூசிச் செயற்றிட்டம் கொவிட் பரவலை 40வீதம் குறைத்துள்ளது.

மேலும் கொவிட் தொற்றால் இறப்பவர் தொகையினையும் 90வீதம் கீழ் குறைத்துள்ளது.

அடுத்து கொவிட் வைரஸ் கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக விகாரமடைந்து வருகின்றது. இதில் மூன்று விகாரங்களே அதாவது பிரித்தானியா, தென்னாபிரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட விகாரங்களே மனித உடலில் தொற்று வீதத்தை அதிகரித்து அதிக பாதிப்பினை ஏற்படுத்தின.

இவ்வாறு விகாரமடைந்த கொவிட் தொற்றுக்களுக்கும் தடுப்பூசி பலன் அளிக்கின்றது. மருத்துவப் பணியாளர்கள், பொதுசன உத்தியோகத்தர்கள் கொவிட் தடுப்பு மருந்து செலுத்துவதனை, முதன்மைப்படுத்துவதற்கு, விகாரமடைந்த பாதகமான கொவிட் தொற்று பரவாது கட்டுப்படுத்துவதே நோக்கமாகும்.

ஏனைய விகாரமடைந்த கொவிட் தொற்று மிதமான நோயறிகுறிகளையே ஏற்படுத்துகின்றது. பொதுவாக தற்போது பரவும் கொவிட் தொற்றானது காலத்துடன் தீவிரத் தன்மை குறைந்த தொற்றாகும். இதன் மூலம் சமூகத்திற்கு மந்தை நிர்ப்பீடனம் கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது. இது கொவிட் தடுப்பூசி பெற்றுக் கொள்வதற்குச் சமனானது.

எனவே கொவிட் தொற்றுத் தொடர்பான தேவையற்ற பீதி தேவையில்லை. கடந்த ஒரு வருடத்திற்கு முன்னைய கெடுபிடி தற்போது தேவையில்லை. மாறாக சமூக இடைவெளி பேணல் முகக்கவசம் அணிதல், கைகளை கழுவல் ஆகிய சுகநல நடைமுறைகளைக் கடைப்பிடிப்போம்.

புதிய விகாரமடையும் கொவிட் வைரஸிற்கான தடுப்பு மருந்தினையும் உடனடியாக தயாரிக்கக்கூடிய சூழலும் ஏற்பட்டு விட்டது. எனவே கொவிட் தொடர்பான அச்சம் எம்மிடம் இருந்து மெல்லவே அகலும் காலம் கனிந்து விட்டது என மருத்துவர் சி.யமுனாநந்தா மேலும் தெரிவித்தார். (5-4)



அனலைதீவு அருணோதயா விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அனலைதீவு பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றது. இரத்ததான முகாமின் நினைவாக பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் நேற்று முன்தினம் மரக்கன்றும் நாட்டி வைக்கப்பட்டது. (படம்:-ரவிசாந்)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)


இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் இன்று 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ மு. பாலகுருசாமிசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பு செய்யப்படும். (5-4)

# மக்களை பாதிக்காத வகையில் மட்டுப்படுத்தல்கள் அமுலாக்கம்



(குப்பிழான்)

அண்மைய நாட்களில் கொரோனா பரவும் வேகம் அதிகரித்துள்ளமையால் யாழ். ஊர்காவற்றுறைப் பகுதிக் கிராமங்களில் தன்னார்வக் குழுக்கள் அமைக்கப்பட்டு மக்களின் ஜீவனோபாயத்தைப் பாதிக்காத வகையில் மட்டுப்பாடுகள் அமுலாக்கம் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடப்பட்டது.

குறித்த கலந்துரையாடல் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் தனிமைப்படுத்தப்படும் குடும்பங்களின் நலனைக் கவனித்தல், புதிய உப கொத்தணிகளின் மூலங்களைத் தொடர்பாளர்களைக் கண்டறிந்து கட்டுப்படுத்தல், அத்தியாவசிய நிகழ்வுகள் தவிர்ந்தவற்றை நிறுத்துதல் என்பவை தொடர்பாக கிராமிய சமூக மட்ட அமைப்புக்களுடன் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

இதேவேளை, புதிய பரவுகைகளுடன் தொடர்புடையோரை அறிந்திருந்தால் தகவல் தந்துவுமாறு ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சார்பாக சுகாதார வைத்திய அதிகாரி ப. நந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார். (5-4-18)

# மணல் அகழ்வை தடுக்க நடவடிக்கை எடுங்கள்

## பொது அமைப்புகள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட வரணி மாசேரி மற்றும் இடைக்குறிச்சி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது.

குறிப்பாக மாசேரி வடக்கு முள்ளாவெளிப் பகுதி மற்றும் இடைக்குறிச்சி கிழக்கு காட்டுப் பிரதேசம் மற்றும் நீர்பாய்ந்தோடும் வாய்க்கால்களில் இருந்தே மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்றது.

குறிப்பாக அதிகாலை, இரவு வேளைகளிலும் வார இறுதி நாட்களிலும் இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகிறது.

இவ்விடயம் சம்பந்தமாக சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டங்களின்போது பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்படுகின்ற போதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லையென பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

ஆகவே இவ்விடயத்தில் கவனம் செலுத்தி இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-103)

# சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்தக் கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சி மேற்கு நாவற்குழி பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த சாவகச்சேரி பிரதேசசபை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் திருமதி நி.கலைவாணி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது பிரேரணையில் ,நாவற்குழி வேலம்பிராய் கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள தனியார் காணிகளில் தொடர்ச்சியாக அனுமதியின்றி சட்டவிரோதமாக மணல் அகழப்படுகிறது. இவ்வாறு மணல் அகழப்படும் இடங்கள் மாரி காலத்தில் வெள்ளக்காடாக மாறுவதுடன், மணல் அகழ்வால் கடல் நீர் உட்புகும் அபாயமும் காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே பிரதேச சபை சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் கேட்டுக் கொண்டார். (5-4-30)



சர்வதேச போக்குவரத்து தினத்தை முன்னிட்டு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் எண்ணக்கருவிற்கமைவாக யாழ்.பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் மேற்பார்வையில் கடந்த 5 ஆம் திகதி காங்கேசன்துறை புகையிரத நிலைய வளாகத்தில் 100 மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.

# எதிர்ப்பு அரசியல் செய்வது இலகுவானது-பிள்ளையான்

(மட்டக்களப்பு)

எதிர்ப்பு அரசியல் செய்வது இலகுவானது என மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான, பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியில் இருக்கும் போது எதுவும் கதைக்க முடியும். அவரால் கடந்த காலத்தில் கூறியது போல் இப்போது கூற முடியாது.

எதிர்ப்பு அரசியல் செய்ய மாட்டார் - செய்யவும் முடியாது.

அரசியல் ரீதியான பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் மக்களுக்கு எமது அரசியல் காலத்தில் என்ன செய்துள்ளோம் என்பது தான் முக்கியம் என அவர் தெரிவித்தார். (நி-4)

## அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ள நிபுணர் குழுவின் ஆய்வு அறிக்கை

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பின் ஆரம்ப வரைவு இந்த மாத இறுதியில், அதனை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவினால் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

புதிய அரசியலமைப்பு சபையை உருவாக்குவதற்காக கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதிசட்டத்தரணிரோமெஷ் டி சில்வா தலைமையில் குறித்த நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

சட்டத்தரணிகளான மனோஹர டி சில்வா, காமினி மாரபன, சஞ்சிவ ஜயவர்தன, சமந்தா ரத்வத்தேவும் பேராசிரியர்களான நஷிமா கமுர்தீன், ஜீ.எச். பீரிஸ், வசந்த செனவிரத்னவும் கலாநிதி ஏ.சர்வேஸ்வரனும் அந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

குறித்த காலப்பகுதியில் இந்த குழுவால் அனைத்து கட்சி தலைவர்கள், சமையத்தலைவர்கள, சிவில் அமைப்புக்கள் உள்ளிட்ட பல தரப்பினரின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளும் பெறப்பட்டிருந்தன.

பின்னர் அந்த யோசனைகளை விரிவாக ஆராய்ந்து சில வாரங்களுக்கு முன்னர் சட்டமூலம் தயாரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த மாத இறுதியுடன் நிபுணர் குழுவின் உத்தியோகபூர்வ காலம் நிறைவடையவுள்ளதுடன் அதற்கு முன்னர் புதிய அரசியலமைப்பின் வரைவு, நீதியமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது.

பின்னர் அந்த வரைவு, அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டு நீதி சட்டமூல திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

அதன் பின்னரே புதிய அரசியலமைப்பின் வரைவு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. (நி-4)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: செவ் 10 சூரி 2 இல் உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: **O/L,** கட்டாரில் சாரதி<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், வீடு முக்கியம், மற்றவை மணமகளின் பெற்றோர் விருப்பம், வெளிநாடும் விரும்பத்தக்கது<br>தொ.இ: **B/11557** | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: திருகோணம்<br>கி.பா: 67 செவ் 7 சூரி 8 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பொறியிலாளர், நோர்வே **PR** உண்டு<br>எதிர்பார்ப்பு: நோர்வே மட்டும்<br>தொ.இ: **G/11649** |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 12 செவ் 2 சூரி 3 இல் உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: **A/L** பிரான்ஸ் **PR** இல்லை<br>எதிர்பார்ப்பு: உள்நாடும், வெளிநாடும்<br>தொ.இ: **B/11558** | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 78 செவ், சூரி 7 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: **B.Sc** நிரந்தர கணித ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: தனியார், அரச வேலை உள்நாடும் வெளிநாடும் எதிர்பார்க்கப்படும்<br>தொ.இ: **G/11661** |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 13 1/2 செவ் 2 சூரி 6 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: **B.Sc,** நிரந்தர ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: ஆசிரியை விரும்பத்தக்கது.<br>தொ.இ: **B/11559** | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 40 1/2 செவ் 11 சூரி 12 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: தையல்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: **G/11662** |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: செவ் 4 சூரி 7 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: லண்டன் கடை **PR** உண்டு<br>எதிர்பார்ப்பு: லண்டன் மட்டும்<br>தொ.இ: **B/11560** | பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 19 3/4 செவ் 9 சூரி 10 இல்<br>தகைமை/தொழில்: **B.Sc** நிரந்தர விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும் நிரந்தர தொழில்<br>தொ.இ: **G/11665** |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# 2023 A/L ZOOM CHEMISTRY
## (O/L எழுதுபவர்களுக்குரியது)
## க.சிவத்திரன் B.Sc (Hons)

ஆரம்பம் 15.03.2021 Mon 6.00pm - 7.30 pm
Mon, Tue, Thur, Fri 6.00pm - 7.30pm

**இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் இணையலாம்.**
**இறுதிப்பரீட்சை வரை இதே நேர அட்டவணைப்படியே ZOOM இல் தொடரும்.**

**Normal Call : 077 008 6416**

2021 & 2nd Shy அலகுரீதியான கடந்தகால வினா விடை வகுப்பு Daily 5.30am - 7.00 am (ZOOM)
Inorganic நடைபெறுகிறது.

2021 & 2nd Shy Theory அயன்சமநிலை (ZOOM)
ஆரம்பம் 12.03.2021 Fri 7.30pm - 9.00pm
Sun, Tue, Fri 7.30pm - 9.00pm
Wed 6.00pm - 7.30 pm (Questions)

(6055)

2022 Theory Inorganic நடைபெறுகிறது (ZOOM)
Mon, Wed, Thur, Sat 7.30pm - 9.00pm



# சர்வதேச மகளிர் தினம் மார்ச் - 8
## சமூகத்துக்கான விழிப்புணர்வு

### நாம் வாழப்பிறந்தவர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம் அன்புறவுகளே

பெண்களின் சக்தி என்பது பெண்களின் ஆன்ம ஆற்றல், அரசியல், சமூக, பொருளாதார மேம்பாடு மற்றும் உடல் உள வலிமை ஆகியவற்றைக் குறிப்பதாகும்.
பெரும்பாலும் பெண் சக்தி என்பது அவர்களின் தன்னம்பிக்கையையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்வதையே சுட்டுகிறது.
பெண் சக்திஎன்பது பின்வருவனவற்றின் முழுமை அல்லது அவை போன்றன என்று கூறலாம்.
சுயமாக முடிவெடுக்கும் உரிமை.
சரியான முடிவை எடுக்கத் தேவையான தகவல்களையும் வாய்ப்புகளையும் பெற்றுள்ளமை.
'ஆம்' அல்லது 'இல்லை' என்றும் 'இது' அல்லது 'அது' என்று கூறுவது போல இல்லாமல் தனது முடிவைத் தீர்மானிக்கத் தேவையான பரவலான வாய்ப்புகள்.
கூட்டு முடிவு எடுக்கும் சூழலில் தன் கருத்தை உறுதியாக நிலை நிறுத்தும் தன்மை.
மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து உறுதிமிக்க நேர்மறையான சிந்தனை.
தன்னுடைய அல்லது தன் குழுவினுடைய வலிமையை அதிகரிக்க தேவையான திறமைகளைக் கற்றுக்கொள்ளும் தன்மை.
மற்றவர்களின் எண்ணங்களை அல்லது கருத்துக்களை மாற்ற நேரிடும்போது ஜனநாயகமான முறையில் மாற்றும் திறன்.
சுய முன்னேற்றம் மற்றும் முடிவுகள் எடுக்கும் தருணங்களில் சமுதாய வளர்ச்சியையும் மாற்றங்களையும் கருத்தில் கொள்ளுதல்.
ஒருவரது நல்லியல்புகளை அதிகரித்து அவரை ஏற்றுக்கொண்டு சமூகத்துக்குள் இணைத்தல்.
இத்தனை அறிவு ரீதியான தகுதிகளைக் கொண்ட பெண்கள் சமூகத்தை செதுக்கும் சிற்பிகளே – உங்கள் வாழ்க்கையை அழிவின் விளிம்புக்குக் கொண்டு செல்ல வேண்டாம்.
உங்கள் அனைத்துவிதமான பிரச்சினைகளுக்கும் எம்மை அணுகுங்கள். கரம் கொடுக்கவும் ஆலோசனை வழங்கவும் காத்திருக்கின்றோம். (இரகசியம் பேணப்படும்.)

தொடர்புகளுக்கு - திருமதி.ப.காயத்திரி
செயலாளர், இலங்கை இளையோர் விழிப்புணர்வு இயக்கம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 077 413 5036

(6060)

**அனைத்து பெண்களுக்கும் எமது மகளிர் தின நல்வாழ்த்துகள்.**

# 70 கிராமியக்குளங்கள் புனரமைப்பு



(குருமன்காடு)

நீர்ப்பாசன செழிப்பு திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 70 குளங்கள் புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மூன்று முறிப்பு கோணயன்குளம் புனரமைப்பு வேலைத்திட்டம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த குளமானது 8.7 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்பு செய்யப்படுகிறது. இதன் மூலம் குறித்த குளத்தின் கீழான விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி.என்.ரஞ்சனா, கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர், கமக்கார அமைப்பினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (5-4-250)

பசியில்லா மன்னார் அமைப்பின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று மன்னார் மாவட்ட வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவில் இடம்பெற்றது.

(படம்:-ஜோசப் நயன்)



# மீள்குடியேறிய குடும்பங்கள் தொடர்ந்தும் கஷ்டத்தில்

(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இதுவரை மீள் குடியேறியுள்ள 748 குடும்பங்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவை காணப்படுவதாக பிரதேச செயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் இதுவரை 4632 வரையான குடும்பங்கள் குடியேறியுள்ள நிலையில் கண்ணிவெடி அகற்றப்படாத பிரதேசங்களாக காணப்படுகின்ற முகமாலை, கிளாலி ஆகிய பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறுவதற்காக விண்ணப்பித்துள்ளன.

இந்த நிலையில் ஏற்கனவே மீள்குடியேறி வாழ்ந்து வரும் 4 ஆயிரத்து 632 குடும்பங்களில் 3 ஆயிரத்து 665 குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டங்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன எனவும் மேலும் 748 குடும்பங்களுக்கான வீடுகள் வழங்க வேண்டிய தேவைப்பாடுகள் காணப்படுவதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட 770 குடும்பங்களுக்கான கிணறுகள், 233 குடும்பங்களுக்கான மலசல கூடங்கள், ஆயிரத்து 710 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் என்பனவும் தற்போதைய தேவைப்பாடாக காணப்படுவதாக பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தற்காலிக வீடுகளில் வாழும் குடும்பங்கள் அண்மையில் பெய்த மழை வெள்ளம் காரணமாக பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியிருந்தன.

குறிப்பாக 26 வருடங்களின் பின்னர் மீள்குடியேறியுள்ள இந்திரபுரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் குடியேறி தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் குடும்பங்கள் தொடர்ந்தும் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.(5-4-315)

வன்னி வலம்

# தாக்குதல் நடத்திய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

(நெளுக்குளம்)

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் வைத்திய தம்பதியரின் வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் நேற்று முன்தினம் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(5-4-299)

நயினாதீவை பிறப்பிடமாகவும் லண்டனில் வசித்தவருமாகிய அமரர் நவரத்தினம் ரகுநாதனின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது குடும்பத்தினரால் வவுனியா செட்டிகுளம் அன்புபுரம் நாமகள் வித்தியாலயத்திற்கு கணனி மற்றும் போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரம் என்பன வழங்கப்பட்டன.

(படம்:- சதீஸ்)




# பூநகரி கல்விக் கோட்ட அலுவலகத்தை இடம் மாற்றக் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் தற்போது இயங்கி வருகின்ற பூநகரி கல்வி கோட்டத்தினை பூநகரி மத்திய கல்லூரிக்கு அண்மித்த பகுதியில் அல்லது பூநகரி மத்திய கல்லூரியில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பூநகரி அபிவிருத்தி நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பூநகரி கோட்டக் கல்வி அலுவலகம் தற்போது பூநகரி பரந்தன் வீதியில் பரந்தன் பகுதிக்கு அண்மித்த பகுதியில் அமைந்துள்ள நல்லூர் மகாவித்தியாலயத்தில் இயங்குகின்றது.

குறிப்பாக வேரவில் இந்து மகா வித்தியாலயம் முழுங்காவில் பல்லவராயன்கட்டு உள்ளிட்ட பாடசாலைகள் கோட்டக் கல்வி அலுவலகத்தின் தேவைகளுக்கு நல்லூர் மகா வித்தியாலயத்திற்கே வர வேண்டிய தேவை காணப்படுகிறது.

மேற்படி பாடசாலைகளிலிருந்து கோட்டக் கல்வி அலுவலகத்தில் தேவை கருதி வருகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் போக்குவரத்து வசதிகள் இல்லாத பிரதேசங்களிலிருந்து பூநகரி வாடிக்கு வந்து அதிலிருந்து பரந்தன் வீதியூடாக மேலும் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டு அங்கு சென்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலை காணப்படுகிறது.

எனவே போக்குவரத்து சேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் பூநகரி மத்திய கல்லூரி அல்லது அதனை அண்மித்த பகுதிகளில் கோட்டக் கல்வி அலுவலகத்தினை இயங்க வைப்பதன் மூலம் அவர்களின் தேவைகளை இலகுவில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

எனவே கோட்டக் கல்வி அலுவலகத்தினை பூநகரி மத்திய கல்லூரியில் அல்லது அதனை அண்மித்த பகுதியில் இயங்க வைக்குமாறும் அதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் கோரி மாகாண கல்வித்திணைக்களம், வலயக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றிற்கு மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளதாக பூநகரி அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (5-4-315)

# நித்தகைக்குளம் புனரமைப்புக்கான அனுமதி வழங்கப்படவில்லை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப் பற்றின் நித்தகைக்குளம் புனரமைப்பதற்கான அனுமதிகள் கிடைக்கவில்லை என முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு ஆண்டுகளுக்கு முன்னர் இக்குளத்தினை புனரமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இது தொடர்பாக கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் குமுழமுனை கிழக்கில் நித்தகைக்குளம் அமைந்துள்ளது.

30 ஆண்டுகளுக்கு மேலாக இக்குளம் புனரமைக்கப்படாமலே உள்ளது. கடந்த ஒரு ஆண்டுக்கு முன்னர் நீர்ப்பாசனத் திணைக்களம் நித்தகைக்குளப் பகுதிக்குச் சென்று குளத்தினைப் புனரமைப்பதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை தயாரித்தது. அவ்வறிக்கையை உரிய இடங்களுக்கு அனுப்பி வைத்தது.

ஆனால் குளத்தினைப் புனரமைப்பதற்கான நிதியோ அல்லது அனுமதியோ இதுவரை கிடைக்கவில்லை. நித்தகைக் குளத்தின் கீழ் 600 ஏக்கரில் வயல் நிலம் உள்ளது. குளத்தினை புனரமைக்கின்றபோது கூடுதலான நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியும். நித்தகைக்குளத்தினைப் புனரமைப்பதன் மூலம் இப்பகுதியில் காணப்படுகின்ற வயல் நிலப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை காண முடியும் எனவும் தெரிவித்தார். (5-4-350)

# இராசிபலன்

**08.03.2021**
**மாசி 24, திங்கட்கிழமை**
**தசமி மாலை 6.15 மணிவரை**
**பூராடம் முன்னிரவு 10.51 மணிவரை**
**சுபநேரம் 12.24 - 1.54 மணிவரை**
**இராகுகாலம் 7.54 - 9.24 மணிவரை**
**சந்திராஷ்டமம்:- ரோகினி, மிருகசீரிடம்**
**சர்வதேச மகளிர் தினம். வளவன்**

**மேஷம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**ரிஷபம்**
கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்.

**மிதுனம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்**
தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**
உள்ளம் மகிழும் வகையில் சில சம்பவங்கள் இடம்பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கன்னி**
தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்**
சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்**
உறவினர் வருகையுண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு**
மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**மகரம்**
வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கும்பம்**
பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், திடீர் பணவரவுகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்**
பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கடன் வாங்கவும் செய்யாதே. கொடுக்கவும் செய்யாதே.**

# நாடும் தேசமும் உலகமும் பெண்ணே
## மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கை சமூகம் பெண்களையும் தாய், சகோதரி, மகள், மனைவி மற்றும் இல்லத்தரசி என்ற அவர்களது பல் வகைப்பட்ட வகிபங்கையும் பண்டைய காலம் முதலே மிகுந்த கௌரவத்துடன் மதித்து வந்துள்ளது. ஒரு நாடு பெண்களை நடத்தும் விதம் அதன் உண்மையான வளர்ச்சியின் சமூக குறிகாட்டியாகும். இந்த விடயத்தில் இலங்கை ஏனைய பல நாடுகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது என ஜனாதிப்தி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய சர்வதேச மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்தார்.

பெண் என்பவள் எந்தவொரு சமூகத்திலும் அதன் அடிப்படை அலகாக விளங்கும் குடும்பக் கட்டமைப்பின் அடித்தளமாக விளங்குகின்றாள். தனது வாழ்நாள் முழுவதும் பலவிதமான பாத்திரங்களை வகிக்கும் அவள் பல குடும்ப அலகுகள் இணைந்து உருவாகும் சமூகத்தை பிணைத்து வைத்திருப்பதில் ஒரு வலுவான பங்கை வகிக்கின்றாள்.

எப்போதும் பண அடிப்படையில் மதிப்பிடப்படாத போதும் தேசிய உற்பத்திக்கான அவளது பங்களிப்பு அதிக பெறுமதியுடையது என்பதை உறுதியாகக் கூற முடியும். எனவேதான் பெண்களின் கண்ணியம், சமத்துவம் மற்றும் மகிழ்ச்சியைப் பாதுகாத்துப் போசிப்பது ஒரு சமூகப் பொறுப்பாகும்.

இன்று இலங்கையில் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வாழ்க்கையின் பல துறைகளில் பெண்கள் அதிக பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளனர். இன்னும் பல துறைகளில் அவர்கள் ஆண்களுக்கு சவால் விடும் நிலையில் இருக்கின்றார்கள். இந்த வெற்றியானது பெண்ணின் அறிவாற்றல், தைரியம் மற்றும்அர்ப்பணிப்பைப்போன்றே எமது சமுகத்தின் சமூக நீதி மற்றும் முதிர்ச்சிக்கும் ஒரு எடுத்துக்காட்டாகும். அரசியல் துறையில் அவளது பங்கேற்பு இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும்.

"நாடும் தேசமும் உலகமும் அவளே" என்ற இந்த ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தின கருப்பொருள் காலத்துக்கேற்ற ஒரு கருப்பொருள் என நான் நினைக்கிறேன்.

பெண்களின் பங்கை சரியாக அடையாளம் கண்டிருக்கும் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்ளைப் பிரகடனம் பெண்களின் சமூக மற்றும் பொருளாதார பங்களிப்பை மேம்படுத்துவதாக உறுதியளித்துள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள எட்டு அம்ச அணுகுமுறை இப்போது யதார்த்தமாகி வருகிறது.

சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்து கொள்ளும் எமது நாட்டின் பெண்களுக்கு எனது ஆசீர்வாதங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# கேள்வி அறிவித்தல்
# நெடுந்தீவு பிரதேச சபை

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG)-2021

01. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் **(PSDG)** 2021 நிதி அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டத்திற்கு கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், உள்ளூர் அதிகாரப் பெறுகைக்குழு, நெடுந்தீவு பிரதேச சபை, அவர்கள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்விகோரப்படுகின்றது.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி வேலை அமைப்புக்கான இக்ராட் **(ICTAD)** பதிவு பெற்றிருத்தலும் வேண்டும்.

05. தகைமைத் தேவைப்படுத்தல்கள் கேள்வி ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் கேள்வி ஆவண அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், நெடுந்தீவு பிரதேச சபை, பிரதான வீதி, நெடுந்தீவு, (தொலைபேசி: 021 221 5211) இல் இருந்து 08.03.2021 தொடக்கம் 22.03.2021 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை மேலதிக தகவல்கள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

07. மேற்கூறிய இடத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் 08.03.2021 ஆம் திகதியிலிருந்து 22.03.2021 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2000/-**செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும், நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் தவிசாளர், நெடுந்தீவு பிரதேச சபை, பிரதான வீதி, நெடுந்தீவு எனும் முகவரிக்கு 22.03.2021 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 17.03.2021 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு நெடுந்தீவு பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எந்தவிதமான கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

| இல. | ஒப்பந்த இல | வேலை விபரம் | மதிப்பீடு செலவு (VAT தவிர்ந்த ) (மில்.ரூபாவில்) | ஒப்பந்தக் காலப்பகுதி | தேவைப்படும் தரம் | விலைமனுவை சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலப்பகுதி | | தேவைப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் காலப்பகுதி | திகதி | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலப்பகுதி |
| 1 | NP/14/41(7)/02/PSDG/2021/01 | மலையான் குள வைரவர் வீதி புனரமைப்பு | 2.58 | 60 நாட்கள் | C8 அல்லது மேற்பட்டது | 63 நாட்கள் | 2021.05.24 | 26000.00 | 2021.06.28 |

**தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைக் குழு, நெடுந்தீவு பிரதேச சபை.**
**08.03.2021**

(C-1617)




# எது...? எது...?

அரசர் கிருஷ்ண சந்திரர் அரியணையில் வீற்றிருந்தார். அப்போது நவாபின் தூதன் அங்கு வந்தான். அரசர் அவனை வரவேற்றார்.

அந்த தூதன் இரண்டு வாத்துக் குஞ்சுகளை அவர் முன் வைத்தான்.

அரசர் வாத்துக் குஞ்சுகளைக் கவனித்தார். இரண்டும் ஒரே நிறம், ஒரே அளவுடையதாக இருந்தது. அவற்றிற்குள் எந்த வேறுபாடும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒன்றும் புரியாமல் தூதனை பார்த்தார் அரசர்.

“அரசே! நவாப் அவர்கள் இந்த வாத்துக் குஞ்சுகளை அனுப்பியுள்ளார். இவற்றில் எது ஆண் வாத்து என்பதைத் தாங்கள் கண்டு பிடிக்க வேண்டும்.

அப்படிக் கண்டு பிடித்ததற்கான காரணத்தையும் சொல்ல வேண்டும். அப்படிச் செய்தால், இந்த ஆண்டு நீங்கள் கப்பம் கட்ட வேண்டாம். செய்ய இயலாவிட்டால் உங்கள் சிற்றரசை எங்கள் நாட்டுடன் இணைத்துக் கொள்வோம்” என்றான் தூதன்.


அரசர் மீண்டும், அந்த வாத்துக் குஞ்சுகளை உற்றுக் கவனித்தார். கடினமான சோதனைதான் தனக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொண்டார்.

“இவற்றில் எது ஆண் வாத்து என்பதைக் கண்டு பிடிக்க முடியுமா?” என்று அமைச்சர்களை பார்த்துக் கேட்டார்.

அமைச்சர்கள் எல்லோரும் அமைதியாக இருந்தனர். எப்படி கண்டுபிடிப்பது என்று கவலையில் ஆழ்ந்தார் அரசர்.

அங்கு வேலை செய்துக் கொண்டிருந்த கோபால் இதை கவனித்தான். அவன் அரசனிடம் சென்று, “அரசே! கவலைப்பட வேண்டாம்... எது ஆண் வாத்து என்பதை நான் கண்டுபிடிக்கிறேன்!”” என்றான்.

“எப்படிக் கண்டுபிடிப்பாய்?” என்று கேட்டார். “அரசே! அந்த இரண்டு



வாத்துக் குஞ்சுகளையும் அரண்மனைக் குளத்திற்கு எடுத்து வரச் சொல்லுங்கள் தூதனை. நாம் அனைவரும் அரண்மனை குளத்திற்கு செல்வோம்,” என்றான்.

எல்லோரும் அரண்மனை குளத்தை அடைந்தனர்.

தூதனிடமிருந்து இரண்டு வாத்துக் குஞ்சுகளையும் வாங்கினான் கோபால். அவற்றை அரண்மனைக் குளத்தில் விட்டான்.

இரண்டும் மகிழ்ச்சியாக நீந்தத் தொடங்கின. அவற்றில் முன்னால் சென்ற வாத்தைசுட்டிக்காட்டி “இதுதான் ஆண் வாத்து!” என்றான். “எப்படி அவ்வளவு உறுதியாக சொல்கிறாய்?” என்றார் அரசர்.

“அரசே! முன்னால் செல்கிற வாத்து ஆண் வாத்து. பின்னால் செல்கிற வாத்து பெண் வாத்து. எப்போதும் ஆண் வலிமை மிகுந்ததாக இருக்கும்.

பெண் மென் மையானதாக இருக்கும். அதனால், முன்னால் நீந்திச் சென்றது ஆண்வாத்தாகத்தான்இருக்க வேண்டும்” என்றான்.

“கோபால்! உனக்கு எப்படி நன்றி சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை,” என்ற அவர் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

அந்த வாத்துக் குஞ்சுகளை எடுத்துக் கொண்ட தூதன் அங்கிருந்து ஏமாற்றத்துடன் புறப்பட்டான்.

# மகாபாரதம்






கணவன் குருடனாக இருந்ததால், காந்தாரியும் வாழ்நாள் முழுவதும் கண்களை துணியால் கட்டிக் கொண்டு தானும் குருடு போலவே இருந்தாள்.

காந்தாரியின் இவ்விரதம் பீஷ்மரின் விரதம் போன்றது.

காந்தாரியின் பத்து சகோதரிகளும் திருதராட்டிரனை மணந்து கொண்டனர். கௌரவ வம்ச அழிவுக்குக் காரணமான சகுனி காந்தாரியின் சகோதரன் ஆவான்.

யது வம்சத்தில் சூரசேனன் என்னும் மன்னன் இருந்தான். அவனுக்கு பிரிதா, என்ற மகளும், வசுதேவன் என்னும் மகனும் பிறந்தனர். (இந்த வசுதேவனே கிருஷ்ணனின் தந்தை ஆகும்)

கண்பார்வை இல்லாததால் திருதராட்டிரன் அரசாளும் தகுதியை இழந்தான். பின் பீஷ்மர் பாண்டுவை அரியணையில் அமர்த்தி அவனுக்கு முடி சூட்டினார்.

திருதராட்டிரன் பெயரளவில் மன்னனாய் இருந்தான். பாண்டுவிற்கு மணம் முடித்து வைக்க நினைத்தார் பீஷ்மர். குந்தியின் சுயம்வரத்தில் குந்தி பாண்டுவிற்கு மாலை சூட்டினாள்.

சில காலத்திற்குப் பிறகு மந்திர நாட்டு மன்னன் மகளும், சல்லியனின் தங்கையுமான மாத்ரி என்பவள் பாண்டுவிற்கு இரண்டாம் மனைவி ஆனாள்.

விதுரர் தேவகன் என்னும் மன்னனின் மகளை மணம் புரிந்தார். இவ்வாறு மூன்று சகோதரர்களுக்கும் திருமணம் நிறைவேறியது.

(தொடரும்)

# கிழக்கு முனைய விவகாரத்தில் தேசப்பற்றுடனும் மேற்கு முனைய விவகாரத்தில் தேசத்துரோகிகளாகவும் செயற்பட முடியாது



(கொழும்பு)


கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க முடியாது என போராட்டம் நடத்திய இலங்கை துறைமுக ஊழியர் சங்கம் தற்போது துறைமுகத்தின் மேற்கு முனையத்தையும் வழங்குவதற்கு தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை துறைமுக ஊழியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் நிரோஷன் கொரகாஹேன்ன தெரிவிக்கையில்,

மேற்த முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்க ஒருபோதும் இடமளிக்க முடியாது. கிழக்கு முனைய விவகாரத்தில் தேசப்பற்றுள்ளவர்களாகவும், மேற்த முனைய விவகாரத்தில் தேசத்துரோகிகளாகவும் செயற்படக்கூடாது.

மேற்கு முனையத்தை துறைமுக அதிகார சபை முழுமையாக அபிவிருத்தி செய்வது குறித்து துறைமுக தொழிற் சங்கத்தினர் இன்று துறைமுக அதிகாரசபை தலைவருடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையம் தொடர்பான திட்டத்தில் இலங்கை அரசாங்கம் அதானி நிறுவனத்துடன் நேரடி தொடர்பை கொண்டுள்ளதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.



மேற்கு முனைய அபிவிருத்தி குறித்து அதானி நிறுவனம் வழங்கிய யோசனையை கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் உறுதிப்படுத்தியதாக இலங்கை அரசாங்கம் வெளியிட்ட கருத்து பொய்யானது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தில் உள்ள ஒரு தரப்பினர் அதானி நிறுவனத்துடன் கொண்டுள்ள தனிப்பட்ட உறவைப் பலப்படுத்த மேற்கு முனையத்தை தாரைவார்க்க முயற்சிக்கிறார்கள்.

மேற்கு முனைய விவகாரத்தில் அதானி நிறுவனம் இந்திய அரசாங்கத்தை தவிர்த்து நேரடியாக இலங்கையுடன் தொடர்பு கொள்வது அதிருப்தியளிக்கும் செயற்பாடாகும்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை துறைமுக அதிகார சபை முழுமையாக தனித்து அபிவிருத்தி செய்ய முடியுமாயின் ஏன் மேற்கு முனையத்தையும் அபிவிருத்தி செய்ய முடியாது?

கொழும்பு துறைமுகத்தின் ஏதாவதொரு முனையத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்கும் தனிப்பட்ட முயற்சியை ஆளும் தரப்பின் ஒரு சில உறுப்பினர்கள் முன்னெடுக்கிறார்கள்.

இது நாட்டு மக்களுக்கு இழைக்கும் துரோகமாகும். கிழக்கு முனைய விவகாரத்தில் தேசப்பற்றுள்ளவர்களாகி, மேற்கு முனைய விவகாரத்தில் தேசத்துரோகிகளாக செயற்பட முடியாது. இவ்விடயம் குறித்து இன்று துறைமுக அதிகார சபை தலைவருடன் பேச்சுவார்த்தையினை முன்னெடுக்கவுள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

## தலவாக்கலையில் மதுபானசாலை மூடப்பட்டது

(கொட்டகலை)

தலவாக்கலை நகர மத்தியில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றை கொட்டகலை சுகாதாரப் பிரிவினர் நேற்று தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளனர். குறித்த மதுபான விற்பனை நிலையத்திற்கு நேற்று முன்தினம் தலவாக்கலை பகுதியைச் சேர்ந்த ஒருவர் வருகை தந்து அங்கிருந்து மதுபானம் அருந்திச் சென்றுள்ளார்.

அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்தே இந்த மதுபான விற்பனை நிலையம் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து நான்கு பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவருடன் தொடர்பைப் பேணியவர்கள் விபரமும் திரட்டப்பட்டு வருகின்றன. குறித்த மதுபான் விற்பனை நிலையம் தலவாக்கலை நகரில் சுற்றுவட்டத்திற்கு முன்பாக அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும், குறித்த கொரோனாத் தொற்றாளர் தலவாக்கலை நகரில் உள்ள உடற் பயிற்சி நிலையத்திற்கும் சென்றுள்ளார். இதனால் மேற்படி உடற் பயிற்சி நிலையமும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தலவாக்கலை நகரில் பல இடங்களிலும் நேற்று தொற்று நீக்கி தெளிக்கப்பட்டு தொற்று நீக்கம் செய்யப்பட்டது.

இதற்கான நடவடிக்கை தலவாக்கலை லிந்துலை நகர சபை சுகாதார ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்டது. (நி-4)

## ஒன்பது வெளிநாட்டினர் கைது

(கொழும்பு)

கொழும்பு நகரத்திலும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கையின் போது ஒன்பது வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்று நைஜீரியர்கள், நான்கு மாலைதீவினர் மற்றும் இரண்டு இந்தியர்கள் ஆகியோரே கல்கிஸை, மொரட்டுவை, தெஹிவளை, கிராண்ட்பாஸ், கொம்பனித் தெரு ஆகிய பகுதிகளில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருக்கும் நைஜீரியர்கள் மற்றும் சமூக ஊடகங்கள், இணையம் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளைத் தீங்கிழைக்கும் வகையில் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் பொலிஸாரால் இதுபோன்ற விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நமது பெருமை

வங்காளத்தில் மைக்கல் மதுசூதனதத் என்று ஒருத்தர். பெரிய இலக்கிய மேதை கவிஞர்.மேகநாவதம் என்கின்ற அமர காவியத்தைப் படைத்தவர் அவர். மிகவும் வசதியாக இருந்தவர் தான்.வருகின்றவர்களுக்கெல்லாம் இல்லை என்று சொல்லாமல் கொடுத்துக் கொண்டே இருந்தார்.

ஒரு நேரத்தில் ஒன்றுமே இல்லாமல் கஷ்டப்பட்டார். வறுமையில் வாடினார்.அந்த நேரம் பார்த்து ஒரு ஆள் அவரைத் தேடிக் கொண்டு வந்தார். இதற்கு முன்னால் இந்த ஆள் அவரை நேரிலே பார்த்ததில்லை படங்களிலே பார்த்திருக்கின்றார்.

விலை உயர்ந்த உடைகள் அணிந்த கோலத்தில் படங்களிலே இருப்பார். இப்பொழுது நேரிலே பார்க்கின்ற பொழுது மிகவும் வித்தியாசமாக இருந்தது. அது தான் சந்தேகமாக நீங்க தானே. அந்த இலக்கிய மேதை? அப்படி என்பது மாதிரிப் பார்த்தார். கேட்டும் விட்டார்.

நீங்கள் தானே மைக்கேல் மதுசூதனதத்? என்று. ஆமாம் நான் தான் மைக்கேல். நீங்கள் படங்களில் பார்த்தது கடந்த கால மைக்கேல். இப்பொழுது பார்க்கிறது நிகழ்கால மைக்கேல். நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் என்று கேட்டார்.

ஐயா உங்களிடம் யார் வந்தாலும் வெறுங்கையோடு அனுப்ப மாட்டீர்கள் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனால் இப்பொழுது நீங்களே பண நெருக்கடியில் இருக்கின்றீர்கள் என்பது தெரியாது. அதனால் வந்துவிட்டேன் மன்னிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டே வந்தவர் திரும்பினார். கொஞ்சம் இருங்க என்னுடைய கஷ்டத்தைப் பற்றி கவலைப்படாமல் உங்களுடைய கஷ்டம் என்கின்றதை சொல்லுங்கள் என்றார் இவர்.

அய்யா வீட்டிலே வறுமை. கல்யாண வயதிலே ஒரு பெண். தாங்க முடியாத சுமை என்று சொல்லி கண்ணீர் விட்டார் வந்தவர்.உடனே மது சூதனதத் என்ன செய்தார் தெரியுமா?

தன்னுடைய கிழிந்த சட்டைப் பையில் கையை விட்டார். 500 ரூபாயை எடுத்தார். அந்த ஏழையிடம் கொடுத்தார்.

அது சரி.அவருக்கு ஏது அந்த 500 ரூபாய் தெரியுமா?கொஞ்ச நேரத்திற்கு முன்னாடி தான் ஒரு புத்தகக் கம்பனிக்காரர். இந்தக் கவிஞரோடு வறுமையைக் காணச் சகிக்காமல் ஒரு 500 ரூபாயை முன் பணமாகக் கொடுத்து..ஒரு புத்தகம் எழுதிக் கொடுங்க என்று சொல்லிவிட்டுப் போயிருந்தார். இவரும் சரி என்று சொல்லியிருந்தார்.

வந்தவருக்கு இந்த விடயம் எல்லாம் தெரியாது.இவர் கொடுத்ததை வாங்கிக் கொண்டு நாத்தழுதழுக்க ஆசி வழங்கிவிட்டுப் போய்விட்டார்.நடந்தது முழுவதையும் அந்த கவிஞரோடு மனைவி உள்ளேயிருந்து பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் இந்திய பெண்மணி இல்லை. ஐரோப்பியப் பெண்மணி.

கவிஞர் மெதுவாக திரும்பி மனைவியைப் பார்த்தார்.அவர்கள் கந்தல் ஆடையோடு கையில் ஒரு கசங்கிய காகிதம்.வீட்டுக்கு வாங்க வேண்டிய பொருள்களின் பட்டியல் மகளுக்கு மருந்து..வீட்டிலே உள்ளவர்களுக்கு துணிமணி, மளிகை சாமான்..இப்படி..

மனைவியிடம் வந்தார் கவிஞர், எங்கள் அன்பு மகள்..காய்ச்சலால் படுத்த படுக்கையில் இருக்கின்றார்.நாங்களே கந்தல் ஆடையில் இருக்கின்றோம். அதனால் நான்கு பேருக்கு முன்னாடி கௌரவமாக நடமாட முடியாத நிலைமை.இப்படிப்பட்ட நிலையில் முன்னே பின்னே யோசிக்காமல் இப்படி விவேகமில்லாமல் நான் நடந்திருக்கக் கூடாது தான் இருந்தாலும் என்ன செய்வது?

எனக்குள்ளே இருக்கின்ற கவியுள்ளம் என்னை ஆட்டிப் படைக்கின்றது. இப்படி யாராவது கஷ்டப்படுகின்றதைப் பார்த்தால் இந்தப் பாழும் நெஞ்சம் பதறித் துடித்துப் போய்விடுகின்றது என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்று மனைவியைப் பார்த்து சொன்னார்.

வெளிநாட்டுப் பெண்ணாக இருந்தாலும் அந்த அம்மா தன் கணவருடைய பாதங்களைத் தொட்டு கண்ணிலே ஒத்திக் கொண்டு சொன்னார்கள்.

இது நாள் வரைக்கும் அறிவாற்றல் மிகுந்த ஒரு கவிஞராக்த்தான் உங்களை நான் பார்த்தேன். உங்களுடைய மனிதாபிமானம் எவ்வளவு விசாலமான என்பதை இன்றைக்குத் தான் நான் தரிசனம் செய்தேன்.

நான் அந்நிய நாட்டிலே பிறந்தவள். கர்ணனைப் பற்றியும் அரிச் சந்திரனைப் பற்றியும் நீங்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன். இன்றைக்கு அவர்களை நேருக்கு நேர் பார்த்துவிட்டேன் என்றார்கள்.

இவ்வளவு பெருமை உள்ளது சேர் எங்கள் தேசம். இந்தப் பெருமையைக் காப்பாற்ற வேண்டியது எங்கள் கடமை இல்லையா?யார் நினைத்துப் பார்க்கின்றார்கள் இதை?

கொஞ்ச நாளைக்கு முன்னால் நான் ஒரு இலக்கிய கர்த்தாவை சந்தித்தேன். அவர் மிகவும் மோசமாக இருந்தார். கிழிந்த சட்டை, எண்ணெய் தடவாத தலை.

ஐயோ பாவம் என்ன சேர் இப்படி ஆகிவிட்டீர்கள்? என்று கேட்டேன்.

ஒரு புத்தகம் எழுதி சொந்தச் செலவில் வெளியிட்டேன் சேர். இருந்த பணம் முழுவதும் செலவாகிவிட்டது. அது தான் இப்படி ஆகிவிட்டேன் என்றார்.என்ன புத்தகம் அது? தலைப்பு என்ன? என்று கேட்டேன். பணம் சம்பாதிப்பது எப்படி? இது தான் சேர் தலைப்பு என்றார் அந்த ஆள்.



# என் அடையாளம்... என் வாழ்க்கை... என் உரிமை...

## சர்வதேச மகளிர் தினம் இன்று

பெண்களை எடைபோடுவது இந்தச் சமூகம் செலுத்தக்கூடிய எளிமையான ஆதிக்கம். ஏனெனில், அதை எதிர்த்து ஒலிக்கும் குரல்கள் குறைவு. அப்படி குரல் எழுப்பும் பெண்களையும் 'திமிர் பிடித்தவள்' என்று லேபிள் ஒட்டும் 'பிளான் பி'யும் இந்தச் சமூகத்திடம் தயாராக இருக்கும். எனில், அந்தத் திமிரை பிடித்துக்கொள்வோம் தோழிகளே தவறில்லை. நம் விருப்பம், முன்னேற்றம், சுயமரியாதை, ஆசைப்படும் வாழ்க்கை இவற்றுக்கான முடிவுகளை நாம் எடுக்கும்போது, சமூக மதிப்பீடுகளால் நாம் பின்னிழுக்கப்படாமல் இருப்பதற்கான கேடயமாக இருக்கட்டும் அவர்கள் சொல்லும் 'திமிர்'.

சிவப்பு நிற லிப்ஸ்டிக், ஸ்லீவ்லெஸ் ஆடை என்று தன்னை பொலிவாக்கிக் கொள்ளும் பெண்ணை உடனே தராசில் தூக்கிப்போடுபவர்களுக்கு, அந்த அலங்காரம் அவளுக்குத் தரும் தன்னம்பிக்கை பற்றி புரிந்துகொள்ள மனமிருக்காது. திருமணமாகி ஒரு சில வருடங்களில் 'விசேஷம் இல்லையா...' என்று கேட்பவர்களுக்கு, கேட்கப்படுபவளின் உடல், மன வலிகள் பற்றியெல்லாம் தெரிந்துகொள்ள நேரமிருக்காது. ஆறு மாத கைக்குழந்தையை வீட்டில் விட்டுவிட்டு வேலைக்குச் சென்று திரும்பும் பெண்ணின் தாய்மையை மதிப்பீடு செய்பவர்களுக்கு, எந்தச் சூழ்நிலையில் அவள் அப்படி ஓடிக்கொண்டிருக்கிறாள் என்பதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமிருக்காது. தன் குழந்தையுடன் மறுமணம் செய்துகொள்பவளின் முடிவு குறித்து, 'இது தேவையா?' என்று கேள்வி எழுப்புபவர்களுக்கு, ஒரு துணை அவளுக்கு எந்தளவுக்குத் தேவை என்பதை உணர்வதற்கு மனதே இருக்காது.

இப்படி ஆடையிலிருந்து வேலை, வாழ்க்கை என்று பெண்ணின் ஒவ்வொரு தேர்வும் முடிவும் இங்கு ஜட்ஜ் செய்யப்பட்டுக்கொண்டே இருக்கிறது. தன் வாழ்க்கைக்கு எந்த வகையிலும் உதவாத, வேடிக்கை மட்டுமே பார்த்து வாய்க்கு வந்ததைப் பேசும் அந்த 'நாலு பேர்' என்ன சொல்வார்களோ என்ற மதிப்பீடுகளுக்கு அஞ்சி, அதை மீறத் துணிவின்றித் தேங்கிவிடும் பெண்கள்தானே இங்கு பெரும்பான்மை தோழிகளே? இன்னொரு பக்கம், 'என்ன வேணாலும் சொல்லிக்கோங்க, என் வாழ்க்கை, என் முடிவு' என்று சுதந்திர சிறகைத் தங்களுக்குப் பூட்டிக்கொண்டு முன்னேறிச் சென்றுகொண்டிருக்கும் பெண்கள்... நமக்கும் தைரியமும் நம்பிக்கையும் தருகிறார்கள்.

இந்த மகளிர் தின நாளில் 'என் அடையாளம், என் வாழ்க்கை, என் உரிமை' எனும் எண்ணத்தில், அடக்குமுறையான சமூக மதிப்பீடுகளைக் கடந்து வந்ததால் தாங்கள் அடைந்திருக்கும் வெற்றி மற்றும் மகிழ்ச்சி பற்றிப் பகிர்ந்துகொள்கிறார்கள் பல்துறை பெண்கள்.

நீங்கள் மறுத்த பழைமைக்காகவும், எடுத்த புது முடிவுக்காகவும் தினம் தினம் மதிப்பீடு செய்யப்படும் தோழிகளுக்கு அன்பும் வாழ்த்துகளும். உங்கள் முடிவின் பின்னுள்ள நியாயமான காரணங்களை நாங்கள் அறிய மாட்டோம். என்றாலும், உங்கள் வாழ்க்கைக்கு எது எந்தளவுக்கு முக்கியமானது என்பதை புரிந்துகொள்வோம். மேலும், இந்தச் சமூகத்திடம் அனைவரும் சேர்ந்து உரக்கச் சொல்வோம்.

எமக்கெதிராக வீசப்படும் வலைகளை அறுத்தெறிந்து அதிலிருந்து நாம் மீண்டெழுவோம் என இன்றைய இந்த மகளிர் தினத்தில் நாம் உறுதி கொள்வோம். இந்தச் சமூகம் ஆயிரம் பேசும். அதனால் தான் கடவுள் நாக்கிற்கு எலும்பைப் படைக்கவில்லை போலும்.

ஆதலால் அது சுழன்று சுழன்று பேசும் வல்லமையைப் பெற்றுள்ளது. பூமிக்குள் விதைக்கப்பட்ட விதை மண்ணை உடைத்து முளையாய் வெளிவரும். அந்த முளையை அதிகார வர்க்கம் மிதிக்க முயலும்.

ஆனாலும் அந்த அதிகார உதையையும் தாண்டி நாம் மீண்டெழுவோம்.

பெண்களை இழிவுபடுத்துவோரை நாம் கவனத்தில் கொள்வது நல்லதல்ல. அது எமது வளர்ச்சியையே பாதிக்கும். நாம் செல்லும் பாதை சரியாக இருந்தால் அந்தப் பாதையில் வீறுகொண்டு முன்னேறுவோம். எம் பாதத்தடங்கள் பாதைகளை உருவாக்கினால் ஆயிரம் ஆயிரம் பாதங்கள் எம் அடியை பின்தொடரும். அதுவே எழுச்சி. அடக்குமுறைக்குள் இருந்து பெண்மை மீண்டெழ வேண்டும் என்பதற்கு அப்பால் அடக்குமுறை செய்பவர்கள் மனம் மாற வேண்டும். இதை இந்த மகளிர் தினத்தில் திடசங்கற்பம் பூணுவோமாக.

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2248


### துவாரகா

மனைவி : ஏங்க! சாதாரணமா இருக்கிறப்ப முத்தே, மணியேன்னு கொஞ்சுறீங்க குடிச்சா மட்டும் பேயே, பிசாசேன்னு திட்டுறீங்களே



கணவன்: என்னடி பண்றது! போதை ஏறிட்டா எனக்குப் பொய்யே வரமாட்டேங்குது.

### நிதர்சி




### சிந்துஜன்

மௌனமும் சிரிப்பும் மிகவும் சக்திவாய்ந்தவைகள்



மௌனம் நிறையப் பிரச்சினைகளை குறைத்துவிடும்; சிரிப்பு நிறையப் பிரச்சினைகளைத் தீர்த்து விடும்

### ரேகன்

கூடுகளில் தேடுவதை விட சிரமமானது



கூட்டத்தில் விட்ட நம் செருப்பைத்தேடுவது

### குவேதா




வேற வழி இல்லை வெள்ளைக் கோழி, நீ நீச்சல் கத்துக்கிட்டுத்தான் ஆகனும்

### கண்ணன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# புதிய மகாஜனன் இளைஞர்கள் ரொரன்ரோ கனடா

## நிதிப்பங்களிப்பில் 160 மாணவர்களுக்கு கற்றல் ஊக்குவிப்பு செயற்றிட்டம்!

















தெல்லிப்பழை மகாஜனக்கல்லூயின் பழைய மாணவர்களின் "புதிய மகாஜனன் இளைஞர்கள் ரொரன்ரோ கனடா" வின் மூலமாக நலிவான குடும்பப் பொருளாதார சூழலில் வாழ்ந்துவரும் 160 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான கற்றல் ஊக்குவிப்புக்களை முன்னெடுக்கும் செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது! இதனை இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உறுப்பினர்களால் "உயர்த்தும் கரங்கள்" செயற்றிட்டம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது! அந்த வகையில் இளவாலை, கருகம் பனை, பன்னாலை, கீரிமலை, நகுலேஸ் வரம், வித்தகபுரம், கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம் தெற்கு பகுதிகளை சேர்ந்த 80 மகாஜன கல்லூரி மாண்வர்கள் மற்றும் 80 ஏனைய பாடசாலை மாணவர்களை உள்ளடக்கி மொத்தமாக 160 மாணவர்களுக்கு கற்றல் ஊக்குவிப்பு பணிகள் ஆரம்பிக்கபட்டன! விசேடமாக இம்மாண வர்கள் அனைவருக்கும் புத்தகப்பைகள் மற்றும் அப்பியாசக்கொப்பிகள் வழங்கப்பட்டதுடன் இலங்கை வங்கி சுன்னாகம் கிளையில் ATM அட்டை வசதியுடன் கூடிய விசேட சிறுவர் சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆண்டுதோறும் இம்மாணவர்கள் புதிய கல்வியாண்டிற்கு செல்லும்போது அவர்களுக்கான புதிய கற்றல் உபகரணங்களும் ஊக்குவிப்பு நிதியும் வங்கி கணக்கில் வைப்பிட திட்டமிடப்பட்டதுடன், மேலும் இம் மாணவர்கள் கல்வி மற்றும் விளையாட்டுத் துறையில் விசேட பெறுபேறு மட்டங்களை அடையும் பட்சத்தில் மேலதிக ஊக்கு விப்புக்களையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது!

இம்மாணவர்களுக்கான புத்தகப்பைகள், கற்றல் உபகரணங்கள் மற்றும் வங்கி கணக்கு புத்தகம், வங்கி ATM அட்டைகளை வழங்கும் செயற்றிட்டம் 2 நிகழ்வுகளாக செயற்படுத்தப்பட்டது! இளவாலை, கருகம்பனை கீரிமலை, நகுலேஸ்வரம் பகுதிகளை சேர்ந்த 75 மாணவர்களுக் கான வங்கிபுத்தகங்கள், ATM அட்டைகள் மற்றும் கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு கடந்த 06-02-2021 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு இளவாலை மெய் கண்டான் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதில் சிறப்பு அதிதிகளாக தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் உப அதிபர் திரு.பிரதாப சர்மா, இலங்கை வங்கி சுன்னாக கிளையின் முகாமை யாளர் திரு.புவனேந்திரராஜா மற்றும் மெய் கண்டான் ம.வி அதிபர் திரு.கணேசானந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்! மேலும் பன்னாலை, கொல்லங் கலட்டி, மாவிட்டபுரம் தெற்கு, வித்தகபுரம் பகுதிகளைச் சேர்ந்த 85 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வங்கி புத்தகம் மற்றும் ATM அட்டைகளை வழங்கும் நிகழ்வு கடந்த 28-02-2021 அன்று பன்னாலை கணேசன் சனசமூக நிலைய முன்றலில் இடம் பெற்றது. இதன் போது பன்னாலை கணேசா இளைஞர் கழகத்தினரும், பன்னாலை கணேசா சனசமூக நிலையத்தினரும் நிகழ்வுக்கு ஆதரவளித்தனர்! இந் நிகழ்வில் விசேட அதிதிகளாக யாழ்.போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் மகாஜனன் Dr.பவானந்தராஜா அவர்களும் இலங்கைவங்கி சுன்னாக கிளையின் பிரதி முகாமையாளர் திருமதி சுகந்தி தயாளன் ஆகியோரும் கலந்துகொண்டனர்!

இச்செயற்றிட்டத்தை திறம்பட செயற்படுத்த ஒத்துழைத்த பாடசாலை அதிபர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் இலங்கை வங்கி சுன்னாகம் கிளையினருக்கு நன்றிகள்!!!

தொடர்ச்சியாக அளவெட்டி ,மல்லாகம் மற்றும் ஏழாலை கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கற்றல் ஊக்குவிப்பு செயற்றிட்டம் வெகுவிரைவாக ஆரம்பிக்கப்படவுள்ளது! மகாஜன மைந்தர்களின் பணி தொடர்கிறது!

**"வெல்லுக மகாஜன மாதா"**














# 01 புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### உள்ளூராட்சி மன்றங்கள்

ஒரு நாட்டின் மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகளுடன் மக்களால் நேரடியாகத் தொடர்புகளை ஏற்படுத்த முடியாது. எனினும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்கின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்திருக்கும் தாபனமாக உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் காணப்படும் உள்ளூராட்சி மன்றங்களாக பின்வருவன அமைந்துள்ளன. அவையாவன: மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை என்பனவாகும். நகர மயமாக்கலில் மிக உயர் மட்டத்தில் நிலவும் பிரதேசங்களில் மாநகர சபைகள் அமைந்துள்ளன. நகர மயமாக்கல் குறைந்த பிரதேசங்களில் நகர சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. கிராமியப் பிரதேசங்களில் பிரதேச சபைகள் அமைந்துள்ளன. உள்ளூராட்சிமன்றக் கட்டமைப்பானது, தமது முன்னேற்றம் தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்கின்ற மற்றும் மேற்படி தீர்மானங்களைப் பொது மக்க்ளின் அபிலாசைகளை நிவர்த்தி செய்வதற்காக அமுல்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ள சுயாதீன நிறுவனக் கட்டமைப்பாக மாறியுள்ளது.

இந்த நிறுவனக் கட்டமைப்பின் உந்து சக்தியாக மாறியிருப்பது மக்கள் பிரதிநிதிகள், தமது சமுதாயத்திற்குள்ளேயே வாழும் அயலவர்களின் விருப்பத்தின் பேரில் உறுப்பினர் பதவிக்கு நியமனம் பெறுவதாகும். அதன் அடிப்படையில் உறுப்பினர்களை நியமிப்பதற்கு சிறந்தவொரு தேர்தல் முறைமை இருக்க வேண்டும்.

> **உள்ளூராட்சி மன்றக் கட்டமைப்பானது, தமது முன்னேற்றம் தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்கின்ற மற்றும் மேற்படி தீர்மானங்களை பொதுமக்களின் அபிலாசைகளை நிவர்த்தி செய்வதற்காக அமுல்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ள சுயாதீன நிறுவனக் கட்டமைப்பாக மாறியுள்ளது.**

### தேர்தல் முறைமைத் தெரிவு

ஏறக் குறைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒரு குறிப்பிட்ட தேர்தல் முறைமையின் தெரிவு சம்பந்தப்பட்ட நாட்டின் எதிர்கால அரசியல் வாழ்வில் பரந்த விளைவைக் கொண்டுள்ளது. தேர்தல் முறைமையின் தெரிவானது சுயாதீனமான சட்ட நுணுக்க நிபுணர்கள் தனியொரு 'சரியானவிடை"யைக் கூறக் கூடிய ஒரு கேள்வியென்பதைவிட, அடிப்படையில் ஓர் அரசியல் செயல் முறையாகும்.

ஒரு தேர்தல் முறைமை உள்ளூர்ப் புவியியல் ரீதியான பிரதிநிதித்துவத்தை வழங்குதல் மற்றும் விகிதாசாரத் தன்மையை ஊக்குவித்தல் ஆகிய இரண்டிற்குமாக வடிவமைக்கப்பட முடியும்.

அடிப்படை மட்டத்தில் தேர்தல் முறைமைகள் பொதுத் தேர்தலொன்றில் அளிக்கப்பட்ட வாக்குகளைக் கட்சிகளாலும் வேட்பாளர்களாலும் வெல்லப்பட்ட ஆசனங்களாக மாற்றுகின்றன. ஒவ்வொரு வாக்காளரும் அதே வாக்கை அதே முறையில் வாக்களித்தும் ஒவ்வொரு கட்சிக்கும் ஒரே எண்ணிக்கையிலான வாக்குகள் கிடைத்து இருந்தாலும் கூட, தெரிவு செய்த முறைமையைப் பொறுத்துத் தேர்தல் முடிவுகள் பெரிதும் வேறுபடக் கூடும்.

> **ஒரு தேர்தல் முறைமை உள்ளூர்ப் புவியியல் ரீதியான பிரதி நிதித்துவத்தை வழங்குதல் மற்றும் விகிதாசாரத் தன்மையை ஊக்குவித்தல் ஆகிய இரண்டிற்குமாக வடிவமைக்கப்பட முடியும். சில முறைமைகள் அரசியல் கட்சிகள் உருவாக்கப்படுதலை ஊக்குவிக்கின்றன அல்லது கட்டாயப்படுத்தவும் செய்கின்றன, ஏனையவை தனிப்பட்ட வேட்பாளர்களை மட்டும் அங்கீகரிக்கின்றன.**

சில முறைமைகள் அரசியல் கட்சிகள் உருவாக்கப்படுதலை ஊக்குவிக்கின்றன அல்லது கட்டாயப்படுத்தவும் செய்கின்றன, ஏனையவை தனிப்பட்ட வேட்பாளர்களை மட்டும் அங்கீகரிக்கின்றன. வெவ்வேறு தேர்தல் முறைமைகள் ஒரு சமுதாயத்திலுள்ள பதற்றத்தையும் முரண்பாட்டையும் மேலும் கேடாக்க அல்லது மிதப்படுத்த முடியும்.

தேர்தல் முறைமையொன்று நியாயமானதெனக் கருதப்படாமலும் அடுத்த முறை தேர்தல் வருகின்ற போது தமக்கு வாய்ப்பிருக்கின்றதென எதிர்க்கட்சியினர் நம்புவதற்கு அரசியல் சட்டகம் இடமளிக்காமலும் இருந்தால் தோல்வியுற்றவர்கள் முறைமைக்குப் புறம்பாகச் செயற்பட நிர்ப்பந்திக்கப்படக் கூடும்.

தேர்தல்கள் எல்லாம் நன்றாயிருக்கக் கூடும். ஆனால் தேர்தலில் வாக்களித்தல் கடிமானதாயிருந்தால் அல்லது தேர்தலின் முடிவில் அவர்களின் வாக்கு நாடு ஆளப்படும் முறையில் வேறுபாடு எதனையும் ஏற்படுத்தாதிருநதால் தேர்தல்கள் மக்களுக்கு அர்த்தமற்றனவாக இருக்கக் கூடும்.

தேர்தல் முறைமைகளில் எண்ணிறைந்த நுணுக்க விபர வேறுபாடுகள் உள்ளன. எனினும் அவற்றை 12 பிரதான முறைமைகளாகப் பிரிக்கலாம். இம் முறைமைகளில் பெரும்பாலானவை மூன்று பரந்த குடும்பங்களினுள் அடங்குகின்றன. அவை பெரும்பான்மை (தொகுதிவாரி) முறைமைகள், விகிதாசார முறைமைகள் மற்றும் கலப்பு முறைமைகள் ஆகும்.

> **தேர்தல் முறைமைகளில் எண்ணிறைந்த நுணுக்க விபர வேறுபாடுகள் உள்ளன. எனினும் அவற்றை 12 பிரதான முறைமைகளாகப் பிரிக்கலாம். இம் முறைமைகளில் பெரும் பாலானவை மூன்று பரந்த குடும் பங்களினுள் அடங்குகின்றன. அவை பெரும்பான்மை (தொகுதி வாரி) முறைமைகள், விகிதாசார முறை மைகள் மற்றும்கலப்பு முறைமைகள் ஆகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொகுதிவாரி முறைமை, இருபதாம் நூற்றாண்டில் விகிதாசார முறைமை, இருபத்தோராம் நூற்றாண்டில் இவை இரண்டும் கலந்த கலப்பு முறை ஆகியனவே இப்போதைக்கு செல்நெறயாக உள்ளது.**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொகுதிவாரி முறைமை, இருபதாம் நூற்றாண்டில் விகிதாசார முறைமை, இருபத்தோராம் நூற்றாண்டில் இவை இரண்டும் கலந்த கலப்பு முறை ஆகியனவே இப்போதைக்கு செல்நெறியாக உள்ளது. எனினும் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கியராச்சியம், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இன்னும் தொகுதி முறை தேர்தல் நடைமுறைகளே இருந்து வருகின்றன. எனினும் நேபாளம், ஜப்பான், தாய்வான், பிலிப்பைன்ஸ், தென்கொரியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் சமாந்திர கலப்பு முறையும் பொலிவியா, ஜேர்மன், நியூஸிலாந்து, ஸ்கொட்லாந்து ஆகிய நாடுகளில் விகிதாசார கலப்புமுறையும் நடைமுறையில் உள்ளன. அதேநேரம் விகிதாசார தேர்தல் முறைமையானது ஒரு மூடிய முறைமையாக ஐரோப்பிய நாடுகளிலும், லத்தீன் அமெரிக்க நாடுகளிலும்,ஆசியாவில் கம்போடியாவிலும் நடைமுறையில் உள்னன. இலங்கை, இந்தோனேசிய போன்ற நாடுகளில் திறந்த விகிதாசார முறை நடைமுறையில் உள்ளது.

இலங்கையில் பெரும்பான்மை (தொகுதிவாரி) முறைமைகள், விகிதாசார முறைமைகள் மற்றும் கலப்பு முறைமைகள் ஆகிய மூன்று முறைமைகளும், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் பரீட்சிக்கப்பட்டு விட்டன.

> **இலங்கையில் பெரும்பான்மை (தொகுதிவாரி) முறைமைகள், விகிதாசார முறைமைகள் மற்றும் கலப்பு முறைமைகள் ஆகிய மூன்று முறைமைகளும், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் பரீட்சிக்கப்பட்டுவிட்டன.**

### இலங்கையில் தேர்தல் முறையில் ஏற்பட்ட மாற்றம்

1947 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறையில் இருந்த தொகுதிவாரி தேர்தல் முறையானது 'வாக்காளருக்கு இலகுவான' (Voter Friendly) தொகுதிக்கு ஒரு உறுப்பினரை தெரிவு செய்து கொள்ளும் இலகுவான வழிமுறையாக அமைந்தது. எனினும் அதன் பிரதான குறைபாடாக அமைந்தது என்னவெனில் செல்லுபடியான எல்லாவாக்குகளுக்குமான பிரதிநிதித்துவத்தை அது உறுதி செய்யவில்லை. தோல்வியடைந்த வாக்களார்களுக்கு வழங்கப்பட்ட வாக்குகளுக்கு எந்தப்பெறுமதியும் இருக்கவில்லை.

1978 ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜெயவர்தனஅறிமுகப்படுத்திய விகிதாசார தேர்தல் முறையானது நிறைவேற்றதிகார ஜனாதிபதிமுறை அறிமுகத்தோடு உருவான்து. எனவே விகிதாசார முறையின் பிரதான குறைபாடானது உறுதியற்ற அரசாங்கம் உருவாவதுடன் உறுப்பினர்களின் தெரிவு ஒரு பிரச்சினையானது. வேட்பாளர்கள் அசாதாரணமாக தேர்தல் செலவுகளை மேற்கொள்ள இந்த முறை இடமளித்தது. இவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்தே 2003 ஆம் ஆண்டு தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதற்கான பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமித்தது. மிக நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் 2007 ஆம் ஆண்டு குறித்த தெரிவுக்குழு இடைக்கால அறிக்கையை வெளியிட்டது. இதனடிப்படையிலேயே 2012 ஆம் ஆண்டு தொகுதிவாரியும் விகிதாசாரமும் இணைந்த கலப்பு முறை அறிமுகம் செய்யப்பட்டது.

### உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறை

விகிதாசார பிரதி நிதித்துவமுறையினுள் வாக்கெடுப்பு மாவட்டம் பரந்த நிலப்பகுதியினுள் வியாபித்து காணப்பட்டமையினால், அதுவரை மக்களுக்கு பழக்கப்பட்டு காணப்பட்ட வட்டாரத்திற்கு அல்லது தொகுதிக்கு பொறுப்புக் கூறுகின்ற உறுப்பினர் இல்லாமை காரணமாக சாதாரண வாக்காளர்களுக்கு தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்குத் தேவையான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு நிரந்தர பிரதிநிதியொருவர் இருக்கவில்லை.

இத்தேர்தல் முறை குறித்தும் சமூகத்தில் வெவ்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. விருப்பு வாக்கு முறை தொடர்பிலேயே மிக முக்கிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டன. இத்தேர்தல் முறைக்கூடாக பணம்படைத்தவர்கள், அதவாது அதிக பணத்தை செலவளிக்கும் வேட்பாளர் பிரதிநிதிகளாக தெரிவாகினர்.

இறுதியில் அது பாரதூரமான அழிவுகளை நோக்கி நாட்டை தள்ளியது. இம்முறைக் கூடாக சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களும் பணத்தை செலவு செய்து விருப்பு வாக்குகளை பெற்று மக்கள் பிரதிநிதிகளாக தெரிவானார்கள்.

இறுதியில் தேர்தலுக்கு செலவு செய்த பணத்தை ஈட்டிக் கொள்வதற்கு குறிப்பிட்ட மக்கள் பிரதிநிதிகள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடலாயினர். வாக்குகளுக்காக வேண்டி ஒரே கட்சியை சேர்ந்த வேட்பாளர்கள் ஒருவரை ஒருவர் கொலை செய்யும் நிலையையும் இத்தேர்தல் முறையே ஏற்படுத்தியது.

1977 வரையில் நிலவிய தேர்தல் முறையைவிட விகிதாசார தேர்தல் முறையில் ஒரு சில நல்ல அடையாளங்கள் காணப்பட்டாலும், அது நாட்டிற்கு மிகவும் பொறுத்தமான தேர்தல் முறையாகஅமையவில்லை. இதனால் இது குறித்து சமூகத்தில் கடுமையான வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட ஆரம்பித்திருந்தது.

(தொடரும்...)

# மேல் மாகாண பாடசாலைகள்

## இம்மாதம் முதல் மீள திறக்க கோரிக்கை

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் மார்ச் 15 ஆம் திகதி முதல் மீண்டும் பாடசாலைகளை திறக்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கல்வி அமைச்சு அனுமதி கோரியுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா கூறுகையில்.

தரம் - 5, தரம் - 11 மற்றும் தரம் - 13 ஐ முதற்கட்டமாகவும் ஏனைய வகுப்புக்களை கட்டம் கட்டமாக திறக்கவும் கல்வி அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கள் வழங்கிய அறிவுறுத்தல்களை கவனத்தில் கொண்டு சுகாதார அமைச்சகத்திற்கு இந்தத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளன.

எனினும், சுகாதார அமைச்சு இன்னும் அனுமதி வழங்கவில்லை. ஆகவே சுகாதார அமைச்சின் அனுமதியைப் பெற கல்வி அமைச்சகம் காத்திருக்கிறது.

மேல் மாகாணம் உட்பட நாட்டின் அனைத்து பாடசாலைகளும் மார்ச் 15 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும்.

விரைவில் அனுமதி பெறப்பட்டால், மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் அமைச்சகம் பொது அறிவிப்பை வெளியிடும் என்று அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (நி-4)

# ஆலய வழிபாடு

## ஏன் – எதற்கு – எப்படி

### வெற்றி தரும் சங்கு

(தொடர்ச்சி)

வலம்புரி சங்கு புனிதமும் ஆற்றலும் நிறைந்தது. இடது கையால் பிடிக்க தகுந்த அமைப்புடன் இருப்பது வலம்புரி சங்காகும்.

ஆழ்வார்களில் முதல் ஆழ்வாரான பொய்கை ஆழ்வார் சங்கின் அம்சமாக அவதரித்தவர் ஆவார். தோஷங்களில் மிக உயர்ந்த தோஷமான பிரம்மஹத்தி தோஷத்தை விரட்டும் ஆற்றல் வலம்புரி சங்குக்கு உண்டு.

வீட்டில் வலம்புரி சங்கு வைத்து வழிபட்டு வந்தால் மற்றவர்களுக்கு உதவும் அளவுக்கு நம் பொருளாதார நிலை உயரும். செவ்வாய் தோஷம் இருப்பவர்கள் வலம்புரி சங்கில் பால் வைத்து 27 செவ்வாய்க்கிழமை அம்மனை வழிபட்டு வந்தால் எல்லா தோஷங்களும் நீங்கி விடும்.

சங்குக்கு வெள்ளிக்கிழமை தோறும் பூஜை செய்து சங்கு காயத்ரியை 108 முறை ஜெபித்தால் வற்றாத வளம் வந்து சேரும். இத்தகைய சிறப்புகள் கொண்ட சங்கு மூலம் ஈசனுக்கு அபிஷேகம் செய்யும் போது அந்த வழிபாடு இரட்டிப்புப் பலன் தருவதாக மாறுகிறது.

திருவண்ணாமலை, சிதம்பரம், குற்றாலம், திருவானைக்காவல், திருக்கடையூர் தலங்களில் சிவபெருமானுக்கு செய்யப்படும் சங்காபிஷேகங்கள் புகழ் பெற்றவை. திருவாரூர் தியாகராஜருக்கு தினமும் மாலை நேரத்தில் சங்கு முழங்க தீபாராதனை நடத்தப்படுகிறது.

கார்த்திகை மாதம் 108 அல்லது 1008 சங்குகளில் நீர் நிரப்பி சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்யப்படுவதன் பின்னணியில் ஒரு வரலாறு உள்ளது. கார்த்திகை மாதம் முழுவதும் சிவபெருமான தீப ஒளியால் மகிழ்விக்க வேண்டும் என்று சிவாகம சாஸ்திரங்கள் சொல்கின்றன.

தீப ஒளி வழிபாட்டால் இந்த மாதம் சிவனுக்கு வெப்பம் அதிகரித்து விடும்.

இந்த வெப்பத்தைத் தணிக்கவே சிவபெருமானுக்கு 108 மற்றும் 1008 சங்கு புனித நீரால் அபிஷேகம் நடத்தப்படுகிறது.

ஜோதிட சாஸ்திரப்படி கார்த்திகை மாதம் சூரியன் தன் பகை வீடான விருட்சிகத்தில் இருப்பார். சந்திரனும் நீச்சம் பெறுவார். இது ஒரு வகை தோஷமாகும். இந்த தோஷத்தை விரட்டவே சங்காபிஷேகம் செய்யும் பழக்கம் ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள்.

சாபத்தால் தேய்ந்த சந்திரன் ஈசனுக்கு சங்காபிஷேகம் செய்த பிறகே அவர் தலை முடியில் இருக்கும் பாக்கியத்தையும் வளரும் பலனையும் பெற்றார். எனவே கார்த்திகை சோமவாரத்தில் விரதம் இருந்து சங்காபிஷேகம் செய்பவர்களுக்கு திருமண பாக்கியம், குழந்தை பாக்கியம் உண்டாகும்.

சோழபுரம் கைலாசநாதர் ஆலயத்தில் 1008 சங்காபிஷேகம் செய்தால் மனக் கவலைகள் அனைத்தும் திரும் என்பது ஐதிகம்.

பண்ருட்டி திருவதிகையில் உள்ள வீராட்டானேசுவரர் ஆலயத்தில் 14 ஆம் நூற்றாண்டை சேர்ந்த வலம்புரி சங்கு உள்ளது. இந்த சங்கை பார்த்தாலே நமது தோஷங்கள் விலகுகிறது.

காரைக்குடி அருகில் உள்ள மானகிரி காண்டீஸ்வரர் ஆலயத்தில் பிரதோஷம் தினத்தன்று 1008 சங்காபிஷேகம் செய்தால் பணப்பிரச்சினை தீரும்.

பால், தேன், இளநீர், சந்தனம் உட்பட 12 வகை பொருட்களை 1008 சங்காபிஷேகமாக செய்தால் நோய்கள் விலகி நல்ல குணம் உண்டாகும். அதுபோல சரபேஸ்வரருக்கு 108 சங்குகளால் தேன் அபிஷேகம் செய்தால் எவ்வளவு பெரிய நோய் இருந்தாலும் நீங்கி விடும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் இன்றுமுதல் வழமைக்கு

(கொழும்பு)

இன்று முதல் சகல அரச சேவையாளர்களும் பணிக்குத் திரும்பவுள்ளதுடன் அரச நிறுவனங்கள் அனைத்தும் மீண்டும் வழமையான செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளன.

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் சேவையினை முறையாக முன்னெடுத்துச் செல்வதன் ஊடாக நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நேரம் வந்துவிட்டதாக அந்த அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

அது தொடர்பான சுற்றுநிருபம் கடந்த 5 ஆம் திகதி வெளியிடப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரிப்பு



(கொழும்பு)

இந்த வருடத்தின் கடந்த ஜனவரி மாதத்தை காட்டிலும் பெப்ரவரி மாதத்தில் சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை இதனை தெரிவித்துள்ளது. ஜனவரி மாதத்தில் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் வருகையானது ஆயிரத்து 682 ஆக காணப்பட்டுள்ளது. எனினும், கடந்த பெப்ரவரி மாதத்தை பொறுத்தவரையில் நாட்டிற்கு வருகைதந்த வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையானது 3 ஆயிரத்து 366 ஆக அதிகரித்துள்ளது.


2020 ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் சுற்றுலாப்பயணிகளின் வருகையானது 99.3 வீதத்தினாலும் பெப்ரவரி மாதத்தில் 38 வீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 160 | 200 |
| தக்காளி | 160 | 170 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 70 | 50 |
| கோவா | 140 | 120 | 140 | 160 |
| கரட் | 160 | 220 | 200 | 240 |
| பூசணி | 80 | 100 | 80 | 120 |
| புடோல் | 120 | 140 | 100 | 160 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 190 | 100 | 150 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 180 | 150 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 140 | 160 |
| பயற்றங்காய் | 200 | 200 | 170 | 240 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 120 | 100 |
| கறிமிளகாய் | 200 | 150 | 180 | 200 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 120 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | -- | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 160 | 140 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 70 | 80-100 |
| இராசவள்ளி | 200 | 240 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 120 | 140 | 150 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 50 | 40 |
| வல்லாரை | 30 | 100 | 20 | 30 |
| ஈரப்பலா | 140 | -- | 60 | 100 |



பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயம்



யாழ்.பொஸ்கோ புனித திரேசா தேவாலயம்



சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயம்




யாழ். மரியன்னை பேராலயம்

கொவிட்-19 நோயால் உயிரிழந்தவர்களின் சடலங்களை இரணைதீவில் அடக்கம் செய்வதற்கான தீர்மானத்தை அரசு கைவிட வேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாணம் மறைமாவட்ட கத்தோலிக்க தேவாலயங்களில் நேற்று கவனயீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

(படங்கள்-சிவசாந்தன்)

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம். இளவாலை ஜே/ 155 மற்றும் யூதாதேயு இளைஞர் கழகங்களின் ஆதரவோடு நடத்தும் 17 வது இரத்ததான முகாம் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் இளவாலை புனித யூதாதேயு ஆலய முன்றலில் நடைபெற உள்ளது.

எனவே குருதிக் கொடையாளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-6)

# இனந்தெரியாத கும்பல்களால் தாக்கப்பட்டவர் வைத்தியசாலையில்

(அராலி)

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சித்தன்கேணிப் பகுதியில் இனம் தெரியாத கும்பல்களின் ஒன்றின் தாக்குதலுக்கு இலக்காகி மூவர் காயமடைந்துள்ளனர்.


இது தொடர்பாக மேலும் தெரியவருகையில், குறித்த குடும்பஸ்தரையும் அவரது இரண்டு நண்பர்களையும் வழிமறித்த சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலை நடத்தியவர்கள் அதன் பின்னர் தொலைபேசி மூலம் வேறு ஒரு கும்பலுக்கு தகவல் வழங்கியதையடுத்து அவ்விடத்திற்கு வந்த கும்பலானது அவர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது. இதன்போது தாக்குதலுக்குள்ளானவர்கள் சங்கானைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்தவர்களில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (5-4-104)



நோர்வே நாட்டின் நன்கொடையாளி ஒருவரினால் கிளிநொச்சி. முல்லைத்தீவு. மன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 175 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (படம்-தேவானந்தன்)

# தெற்குப் பிரதேச சபையின் நடமாடும் சேவை



(குப்பிழான்)

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் ஜே/198, ஜே/199 மற்றும் ஜே/200 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த பொது மக்களுக்கான நடமாடும் சேவை நேற்று ஞாயிற்றுக் கிழமை சுன்னாகம் அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

வலி. தெற்குப் பிரதேச சபையின் உறுப்பினர் பா. சுரேஸ்குமார் கலந்து கொண்டு மேற்படி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்ற நடமாடும் சேவையில் 200 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (5-4-18)

# பொதுக் கூட்டமும் இரத்ததானமும்

(குப்பிழான்)

பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு, கலைமதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கலைமதி சனசமூக நிலையம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள சர்வதேச பெண்கள் தினப் பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் வலி. கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் திருமதி. லதா உதயதீபன் தலைமையில் இடம்பெறும்.

இதேவேளை, சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு இன்று காலை 9 மணி தொடக்கம் புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் இரத்ததான முகாமும் இடம் பெறவுள்ளது. (5-4-18)

# பனைசார் உற்பத்திகளை பெருக்க இளைஞர்கள் முன்வர வேண்டும்

(சாவகச்சேரி)

எந்தவிதமான பாகுபாடும் இன்றி பனை சார் உற்பத்திகளைப் பெருக்க இளைய சமுதாயம் முன்வர வேண்டும் என தென்னை, கித்துள் பனை மற்றும் இறப்பர் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அண்மையில் கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு விஜயம் மேற்கொண்டு துறை சார்ந்தவர்களுடன் கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய தொழில்நுட்பத்து டன், பாதுகாப்பான முறையில் பனை சார் உற்பத்திகளைப் பெருக்க அமைச்சு தயாராக உள்ளது. இளைஞர்கள் எந்தவொரு பாகுபாடும் இன்றி பனை சார் உற்பத்திகளை பெருக்கி பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும். வடக்கில் 12 இலட்சம் பனை மரங்கள் உள்ள போதிலும் அதில் மூன்று இலட்சம் பனை மரங்கள் மாத்திரமே பனை சார் உற்பத்திப் பொருட்களுக்காக பயன்படுத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அதே போன்று கள்ளுத் தவறணைகளை நவீன மயப்படுத்தி அயலவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் செயற்படுத்தும் பட்சத்தில் அவற்றுக்கு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (5-4-33)

அச்சத்தின் வேட்கைதனை அழித்துவிட்டால்
அப்போது சாவும் அங்கே அழிந்து போகும்.
– பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கண்ணீரும் கம்பலையுமாக வாழும் தமிழ்ப் பெண்களின் அவலம் பாரீரோ!

இன்று மார்ச் 8. சர்வதேச மகளிர் தினம். உலகு வாழ் பெண்களின் உரிமை தொடர்பில் ஓங்கி குரல் எழுப்புவதற்காக உலகத்தால் நிர்ணயிக்கப்பட்ட நாள்.

பொதுவில் பெண்களின் உரிமைகளை மறுக்கின்ற நாடுகளும் சமயங்களும் இன்னமும் உயிர்ப்புடன் இருக்கவே செய்கின்றன.

அதேவேளை ஒரு காலத்தில் நிலவிய பெண்ணடிமைத்தனம் இப்போது எவ்வளவோ அறுபட்டு சாதனை படைக்கும் வீரப் பெண்கள் பாரெங்கும் உள்ளனர் என்ற உண்மையையும் நாம் இங்கு கூறித்தானாக வேண்டும்.

பெண்களின் அடிமைத்தனத்தை எதிர்த்து குரல் கொடுத்த தமிழ்ப் புலவன் பாரதியால் தமிழ் இனம் தலைநிமிர்ந்து நிற்கிறது.

நேர்கொண்ட பார்வை, நிமிர்ந்த நன்னடை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத திமிர்ந்த ஞானச் செருக்கு இருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம் என்ற பாரதியின் பாவரிகள் வீட்டுக்குள் பூட்டிக்கிடந்த பெண்களை விழித்தெழ வைத்தது.

அதேநேரம் பெண்களைத் தாயாகவும் தாம் பிறந்த மண்ணை தாய் மண்ணாகவும் பேசுகின்ற மொழியைத் தாய் மொழியாகவும் கங்கையை பெண்ணாகவும் ஏற்றிப் போற்றிய தமிழ் இனம், பெண்களின் உரிமையை நிலை நாட்டுவதில் கணிசமாகப் பங்காற்றியது என்பதையும் இங்கு நாம் கூறித்தானாக வேண்டும்.

தாய் எனும் அன்பின் அடையாளத்தை கருணையின் வடிவத்தை போற்றி வந்த நம் தமிழ் இனத்தில், பாசத்தின் தவிப்பால் கண்ணீரும் கம்பலையுமாக வாழுகின்ற எங்கள் தமிழ்ப் பெண்களின் அவலத்தை இன்றுவரை சர்வதேசம் கண்டுகொள்ளாமல் இருப்பதுதான் ஏன் என்று தெரியவில்லை.

ஆம், கொடும்போரில் பெற்ற பிள்ளையை, கட்டிய கணவனை, உடன்பிறந்த சகோதரனை இழந்து தவிக்கின்ற பெண்கள் ஒருபுறம்.

காணாமல்போன தங்கள் பிள்ளைகளைத் தேடி அலைகின்ற தாய்மார் இன்னொரு புறமுமாக எம் தமிழ்த் தாய்மார் விடுகின்ற கண்ணீர் கொஞ்சமா என்ன?

தன் பிள்ளைப் பாசத்தால் ஊன் உருகி உள்ளம் நொந்து கண்ணீர் சொரிந்து காலமெல்லாம் காத்திருந்த தாய், தன் பிள்ளை மீண்டு வராததால் காலன் வசமான கதைகள் எத்தனை.

இருந்தும் இன்னமும் அந்தப் பெண்களின் அவலத்தை உலகம் கண்டு கொள்ளவில்லை எனும்போது சர்வதேச மகளிர் தினம் வெறும் சடங்கா? சம்பிரதாயமா? என்பதுதான் புரியாமல் உள்ளது.

உண்மை. இன்றுவரை கண்ணீருடன் வாழுகின்ற தமிழ்ப் பெண்களுக்கு என்று நீதி கிடைக்கிறதோ! என்று நியாயம் வழங்கப்படுகிறதோ! அன்றுதான் மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம் அர்த்தமுடையதாக அமையும்.

அதுவரைக்கும் எல்லாம் பண்டாரவெடிகளேயன்றி வேறில்லை.

# எவ்வழியிலேனும் 1000 ரூபாய் சம்பளத்தை பெற்றுக் கொடுப்போம்- நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான 1000 ரூபாய் சம்பளத்தை எந்த வழியிலாவது பெற்றுக் கொடுப்போம். இதுத் தொடர்பில் பெருந்தோட்ட தொழிற்சங்களுக்கும், பெருந்தோட்ட கம்பனி முதலாளிமார்களுக்குமிடையில் இணக்கப்பாடு ஏற்படாததன் காரணமாக, சம்பள நிர்ணய சபையுடன் கலந்துரையாடி அதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக தொழிற்றுறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் 100 ஆவது வருட பூர்த்தி விழா இடம்பெற்றது.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்துக்கான நோக்கு கொள்கைத் திட்டத்தின் கீழ் உழைக்கும் மக்கள் அனைவரதும் உரிமைகளை பாதுகாப்பதுடன், அவர்களது பொருளாதார நிலைமைகளையும் முன்னேற்ற வேண்டும்.

இந்நிலையில் தொழிற்சங்கங்களின் செயற்பாடானது தேசிய பொருளாதாரத்தை முன்னேற்றும் வகையிலானதாக அமைந்திருக்க வேண்டுமே தவிர அவற்றை பாதிப்படையச்செய்யும் வகையில் அமைந்திருக்கக் கூடாது.

தொழிற்சங்க நடவடிக்கைகள் ஊடாக அரசியல் பொருளாதாரத்தை எவ்வாறு முன்னேற்றலாம். வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்க முடியுமா? நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னேற்ற முடியுமா? போன்ற விடயங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

கொவிட்-19 வைரஸ் பரவலுக்கு மத்தியில் எம்மால் தனித்து பயணிக்க முடியாது. அதனால் தொழிற்சங்கங்களினதும், முதலாளிமார்களினதும் நோக்கம் நீண்டதாக அமைவதுடன் , எதிர்கால இலக்குகளை அடையக்கூடியதாக இருக்க வேண்டும். தொழிற்றுறை அமைச்சர் என்ற வகையில் தொழிலாளர்களின் நலனுக்காக நாம் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்.

அதற்கமைய பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் சம்பளத்தை வழங்குவதற்காக நாம் ஒரு முறையொன்றையும் தயாரித்திருந்தோம். எனினும் முதலாளிமார்களுக்கும் பெருந்தோட்ட தொழிற்சங்கங்களுக்கும் இடையில் இணக்கப்பாடின்மையின் காரணமாக அதனை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போனது.

சம்பள நிர்ணய சபையுடன் கலந்துரையாடி , 1000 ரூபாய் சம்பளம் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எமது அரசாங்கத்திலே வழங்கப்பட்ட வாக்குறுதிய்ய நாம் எப்படியாவது நிறைவேற்றுவோம்.

இந் நிலையில் பெருந்தோட்ட துறைகள் தொடர்பில் நாம் புதிதாக சிந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

பெருந்தோட்ட பகுதிகளில் எந்தவொரு பயனும்பெறாமல்இருக்கும் பெருமளவான நிலப்பகுதிகள் காணப்படுகின்றன. அவற்றை பெருந்தோட்ட மக்களும், அந்த பகுதிகளை அண்மித்து இருப்பவர்களுக்கும் வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

மேலும் பெருந்தோட்ட மக்களின் அடிப்படை வசதிகள், கல்வி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவும் எதிர்பார்த்துள்ளோம் எனத் தெரிவித்தார். (4)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

சிறைச்சாலை முகாமைத்துவ மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் நிறைவேற்று சேவை தொகுதியில் தரம்- III இன் சட்ட அலுவலர் பதவியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை 2121.04.05 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், சிறைச்சாலை முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகளின் புனர்வாழ்வு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, இல. 40, புத்கமுவ வீதி, இராஜகிரிய எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு நேற்று 7 ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலை பார்வையிடவும். (4)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## நடிப்புச் சினம்



"எந்தச் சந்தர்ப்பத்திலும் சினம் நன்மை விளைவிக்காது என்றால் அடம் பிடிக்கும் குழந்தையையும், நல்லவர்களையும் ஏமாற்றும் கபட மனம் படைத்த வேலையாளையும் எப்படித் திருத்துவது? கோபத்தைக் காட்டினால் தானே அவர்கள் ஒழுங்குக்கு வருகிறார்கள்?", என்ற கேள்விகள் எழலாம்.

சினத்தைப் பயன்படுத்தாவிட்டால் நற்பயன் விளையவே விளையாது என்று காணும் இடத்தில் சினம் தேவைதான். ஆனால், இந்தச் சினமானது யார்மீது செலுத்தப்படுகிறதோ, அவர்களுக்கு மட்டும் தான் அது சினமாகத் தோன்ற வேண்டும். மற்றபடி அது நமக்குச் சினமாகவே இருக்கக் கூடாது.

சினம் உதட்டில் இருக்கலாம், உள்ளத்தில் இருக்கக் கூடாது. சினம் வந்தது போல் வேண்டிய அளவு, நடிக்கலாம். ஆவேசத்தை வேண்டுமானாலும் காட்டலாம். ஆனால், அது போலியாக இருக்க வேண்டும். மனம் மட்டும் நீர்த்தளம் போல் சமமாகச் சலனமற்று இருக்கட்டும்.

அது எப்படிச் சாத்தியம் என்றால் சினிமாவில் பார்க்கிறோமே, வில்லனுக்குக் கதாநாயகன் மேல் என்ன கோபம் வருகிறது? அது உண்மையான கோபமா? உண்மையானது என்றால், கதாநாயகன் அல்லவா இறந்து போவான்? நம்மால் நடிக்க இயலாமல் இருக்கலாம். ஆனால், உண்மைச் சினத்தின் அபாயத்திலிருந்து தப்ப, நடிக்கக் கற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும்.

# தமிழ், முஸ்லிம் அடிப்படைவாதம் தலைதூக்க அரசு இடமளிக்காது



(கொழும்பு)

**தமிழ் அடிப்படைவாத, பிரிவினைவாத பயங்கரவாதமும் இஸ்லாம் மதவாத அடிப்படைவாதமும் தலைதூக்க தமது அரசாங்கம் இடமளிக்காது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.**

கிராமத்துடன் கலந்துரையாடல் வேலைத்திட்டத்தின் மற்றொரு கட்டம் குருநாகல் - கிரிபாவ வேரகலவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

ஏப்ரல் 21 தாக்குதலுக்கு அப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கமும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுமே பொறுப்புக்கூற வேண்டும்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படாததால், அவ்வாறான நிலை ஏற்பட்டமை ஆணைக்குழுவின் அறிக்கையில் தெளிவாகிறது என தெரிவித்தார்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் அதனை செய்யத் தவறி விட்டதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் தமிழ் அடிப்படைவாத, பிரிவினைவாத பயங்கரவாதமும் இஸ்லாம் மதவாத அடிப்படைவாதமும் தலைதூக்க தமது அரசாங்கம் இடமளிக்காது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

தற்போது தாம் அதிகாரத்தில் இருப்பதால், தவறிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டிய பொறுப்பு தமக்கு இருப்பதாகவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை விற்று தாம் அதிகாரத்திற்கு வரவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# 264,000 தடுப்பூசிகள் நாட்டை வந்தடைந்தன



(கொழும்பு)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொவெக்ஸின் திட்டத்தின் கீழ் 2 இலட்சத்து 64,000 தடுப்பூசிகள் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்தியாவின் மும்பையிலுள்ள சீரம் மருந்து உற்பத்தி நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட இந்த தடுப்பூசியானது, மும்பையில் இருந்து விமானம் ஊடாக டுபாய்க்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த தடுப்பூசியை, இன்று முதல் 60 வயதிற்கும் மேற்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார். (நி-4)



உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி கோரி நேற்று கறுப்பு ஞாயிறு அனுஷ்டிப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. கறுப்பு ஞாயிறு போராட்டத்திற்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான பிரதான எதிர்க்கட்சி மற்றும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி என்பன உள்ளிட்டவை ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளன.

# ஒரு மில்லியன் தடுப்பூசிகளை வழங்குவதில் சிக்கல்-இந்திய நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை கோரிய ஒரு மில்லியன் கொரோனா தடுப்பூசிகளை குறைந்தபட்சம் ஏப்ரல் பிற்பகுதி வரை தங்களால் வழங்க முடியாது என சீரம் இன்ஸ்டிடியூட் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக குறித்த இந்திய நிறுவனம், எழுத்து மூலம் இலங்கைக்கு தெரிவித்துள்ளதாக ஆங்கில ஊடகமொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

மார்ச் 3ஆம் திகதி, இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு (எஸ்.பி.சி) அனுப்பிய ஒரு கடிதத்தில் சீரம் நிறுவனம் தடுப்பூசி உற்பத்தித் திட்டங்கள் ஒரு தடையை ஏற்படுத்தியுள்ளதாகவும் இது 'உங்களுக்கு எதிர்காலத்தில் தடுப்பூசிகளை வழங்குவதற்கான திறனைப் பாதிப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. 5இலட்சம் டோஸ் பெப்ரவரி இறுதி வாரத்தில் சமூக தடுப்பூசி திட்டத்திற்காக பெறப்பட்டது.


மீதமுள்ள ஒரு மில்லியன் டோஸ் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இலங்கைக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (நி-4)

# சட்டரீதியான பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு அதன் பின்னரே மகாண சபைத் தேர்தல்

(கொழும்பு)

தற்போது நிலவும் சட்டரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வு முன்வைக்கப்பட்டவுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்தவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்தார். நிலவும் சட்டரீதியான பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்திற்கும் சகல கட்சிகளுக்கும் தெரியப்படுத்தியிருப்பதாகவும் ஆணைக் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்த நபர் கைதானார்



(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையின் போது பரீட்சார்த்தியாக ஆள் மாறாட்டம் செய்து, பரீட்சை எழுதுவதற்காக அமர்ந்த குற்றச்சாட்டுக்காக வலஸ்முல்லை பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

28 வயதான அவர் குறித்த பகுதியில் வசிப்பவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான சந்தேக நபரை வலஸ்முல்லை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

# அபிவிருத்தி என்ற பெயரில் காடுகள் அழிப்பு



(கொழும்பு)

அபிவிருத்தி என்ற பெயரில் காடுகள் அழிக்கப்படுவது தொடர்ந்தும் இடம்பெற்று வரும் ஒரு விடயமாகிவிட்டது.

இரத்தினபுரி மாவட்டத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரத்தினபுரி-கலவானை பிடிகலகந்த பகுதியில் இவ்வாறு 100 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் குற்றம்சாட்டுகின்றனர். (நி-4)

## 24ஆம் திகதி...

வவுனியா, புதுக்குளம்பகுதியிலிருந்து சுற்றுலா சென்ற நான்கு இளைஞர்கள் குறித்த பகுதியில் நீராடிய நிலையில், நீரோட்டத்தில் அகப்பட்ட இளைஞனே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி திருமணம் நடைபெறவிருந்த வவுனியாவைச் சேர்ந்த 29 வயதான கருணாரத்தினம் ஜெசாந்தன் என்ற இளைஞனே இதன்போது உயிரிழந்துள்ளதுடன், ஏனைய இளைஞர்கள் கரை சேர்ந்துள்ளனர்.

இந்நிலையில், பிரதேச மீனவர்களும் கடற்படையினரும் இணைந்து சடலத்தை மீட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஞா-281,299,316)

## ஜெனிவாவில்...

பிரித்தானியா உள்ளிட்ட உறுப்பு நாடுகள் சில இந்த பிரேரணையை முன்வைத்துள்ளதுடன், இலங்கை தொடர்பில் கடுமையான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. (ஞா)

## ஆசிரியை, தாதி...

கைதி, மற்றையர் மல்லாவியில் நடைபெற்ற மரணச் சடங்குக்கு சென்று திரும்பியர், இன்னொருவர் கொழும்பிலிருந்து திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பெண்.

அதேவேளை சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குள் வசிக்கும் ஆசிரியை ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியை ஏற்கெனவே சண்டிலிப்பாயில் தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட ஆசிரியையுடன் தொடர்பிலிருந்தவர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் ஏற்கெனவே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட தாதியர்களுடன் தொடர்பிலிருந்த நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்.

இன்னொருவர் 79 வயதுடைய மூதாட்டி. சிகிச்சைக்காக வந்த நிலையில் நோய் அறிகுறி காணப்பட்டமையால் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். (ஞா-18,33)

## வீட்டிலிருந்த...

ஒருவர் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் கத்தி முனையில் வீட்டிலிருந்த தங்க நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் வெளிப்புறத்தில் இருந்த மின்குமிழை அகற்றிய கொள்ளையர்கள் பின்னர் சடுதியாக வீட்டுக்குள் நுழைந்து ஆசிரியையின் கழுத்தில் கத்தியை வைத்ததுடன், இதனால் பதற்றமடைந்த ஆசிரியை அபாய குரல் எழுப்ப முடியாமல் நின்ற நிலையில் சுமார் 3 பவுண் சங்கிலி, காப்பு மற்றும் தோடு, மோதிரம் ஆகியவற்றை பறித்துள்ளதுடன், வேறு பணம், நகை உள்ளதா என கேட்டு அச்சுறுத்தியதுடன், வீட்டுக்குள் தேடுதல் நடத்தியுள்ளனர்.

மேலும் ஆசிரியை தனது தேவைக்காக தேநீர் தயாரித்து சுடு தண்ணீர் போத்தலில் வைத்திருப்பதனை அவதானித்த கொள்ளையன் சிறிய அளவு தேநீரை ஒரு குவளையில் எடுத்து ஆசிரியைக்கு கொடுத்து குடிக்க வைத்ததுடன், தானும் தேநீரை குடித்துள்ளான்.

இவ்வாறு சுமார் அரைமணி நேரம் வீட்டினுள் நின்ற கொள்ளையர்கள் அனைத்தையும் கொள்ளையடித்தவாறு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டினையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டனர். (ஞா)

## வாக்கெடுப்பின்...

வலிமை வாய்ந்த நாடுகள் அச்சுறுத்துவதுடன் உறுப்பு நாடுகள் அவர்களுக்கு அச்சப்படும் நிலைமை உருவாக்குவது வழமை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்காமல் இருப்பதற்காக நிதி மற்றும் கடன்களை வழங்குவதாக அவர்கள் உறுதி வழங்கலாம் எனவும் வெளிவிவகார செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்காமலிருந்தால் அந்த நாடுகளின் மனித உரிமை நிலைவரம் குறித்து மௌனத்தை கடைப்பிடிப்பதாக வலிமைவாய்ந்த நாடுகள் தெரிவிக்கலாம் என தெரிவித்துள்ள ஜயனத் கொலம்பகே இதன் காரணமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை முற்றிலும் மேற்குலக அமைப்பு எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இது முதல்நாளே புலனானது. 21 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டுள்ளது. ஆனால் ஒரு மேற்குலக நாடு கூட இலங்கைக்காக குரல் கொடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக குரல்கொடுத்த 15 நாடுகளில் சொலமன்தீவை தவிர ஏனைய அனைத்தும் மேற்குலக நாடுகள். சொலமன் தீவு அமெரிக்காவின் பழைய காலனி எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஞா)

## அரசின் நிகழ்ச்சி...

வதாக யாழ்.மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் குற்றச்சாட்டியுள்ளார்.

நேற்றைய தினம் யாழ்.மாநகர சபையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே சட்டத்தரணி வி.மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப யாழ்.மாநகர சபையினை கலைத்து அரசிற்கு சார்பாக இந்த மாநகர சபையை பொறுப்பேற்பதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மகிந்த ராஜபக்ஷவின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்பட்டு வருகின்றனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் 2015ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் வெல்ல வேண்டும் என்பதற்காக வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் குறித்த தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என திரிந்தவர்கள், அதேபோல் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் கோட்டாபாய ராஜபக்ஷவை வெல்ல வைப்பதற்காக பல பிரயத்தனங்களை செய்தவர்கள்.

தற்போது மாநகர சபையினை கலைப்பதற்காக மகிந்த குடும்பத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப அவர்களின் கைக்கூலியாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சிலர் செயற்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ஞா-33)

## யாழ்.நகரில்...

போராட்டம் இன்று (மார்ச் 8) யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கில் உள்ள பொது அமைப்புக்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் இன்று முற்பகல் 11 மணிக்கு நல்லூர் பின் வீதியில் உள்ள உணவு தவிர்ப்பு போராட்ட களத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ள இந்தப்பேரணி நாவலர் வீதியில் உள்ள ஐ.நா. அலுவலகம் வரை செல்லவுள்ளது. (ஞா)

## தமிழ்...

இணைந்து இலங்கை மீதான பூச்சிய வரைவுத் தீர்மானம் தொடர்பில் இணைஅனுசரணை நாடுகளின் உறுப்பினர்களுக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடுகளுக்கும் மேன்முறையீடு ஒன்றை செய்துள்ளனர்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்க ஒருங்கிணைப்பாளர்கள் தவத்திரு வேலன் சுவாமிகள், எஸ். சிவயோகநாதன், வண.பிதா கந்தையா ஜெகதாஸ் ஆகியோர் இந்த மனுவில் கையெழுத்திட்டுள்ளனர்.

அத்துடன் காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் சங்க பிரதிநிதிகள், வடக்கு-கிழக்கு பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள், மதத் தலைவர்கள் உள்ளிட்ட தரப்பினரும் இந்த மேன்முறையீட்டுக்கு ஆதரவு வெளியிட்டுள்ளனர். (ஞா-33)

## விக்னேஸ்வர...

உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

நல்லூரில் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வரும் உணவு தவிர்ப்பு போராட்டத்தின் 8ஆவது நாளான நேற்று, போராட்டக்களத்திற்கு சென்று பார்வையிட்டபின்னர் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் என்பதனை தான் வலியுறுத்துவதாகவும் அதற்கான அழுத்தத்தினை மக்கள் ஒழுங்கு செய்யும் சிறு சிறு போராட்டங்கள் ஊடாக அழுத்தத்தினை பிரயோகிக்க முடியும் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் போராட்டம் மேலும் மேலும் வலுப்பெற்று சர்வதேச விசாரணையை சர்வதேச அரங்கில் வலியுறுத்த வேண்டும் என்றும் அவர் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார். (ஞா)

## 5 பேர்...

தார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 502 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

### தன நிதானய

திகதி - 07/03/2021 | சீட்டிழுப்பு இலக்கம் - 456

ஆங்கில எழுத்து: E | வெற்றி இலக்கங்கள்: 11 27 35 69

0 1 9 2

தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324 | உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

NATIONAL LOTTERIES BOARD

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி: 07.03.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 2714

ஆங்கில எழுத்து: M | வெற்றி இலக்கங்கள்: 09 20 38 40

தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி: 2021/03/07

சீட்டிழுப்பு இலக்கம்: 4419

ஆங்கில எழுத்து: J | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 7 7 0 3 7 2

தேசிய லொத்தர் சபை

### தரு திரி சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 29 | திகதி: 07/03/2021

ஆங்கில எழுத்து: C | வெற்றி இலக்கங்கள்: 08 40 83 92

தேசிய லொத்தர் சபை

### செவன

திகதி: 07/03/2021

சீட்டிழுப்பு இலக்கம்: 320

ஆங்கில எழுத்து: F | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 31 46 51 61

NATIONAL LOTTERIES BOARD

### அத கோடிபதி — ADA KOTIPATHI

கிழமை: ஞாயிற்றுக்கிழமை | சீட்டிழுப்பு இல: 1215 | வர்ணம்: பச்சை | சீட்டிழுப்பு திகதி: 07.03.2021

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 115,099,180

வெற்றி இலக்கங்கள்: 05 34 37 54 | ஆங்கில எழுத்து: U

அபிவிருத்தி லொத்தர் சபை — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா — Shanida

கிழமை: ஞாயிற்றுக்கிழமை | சீட்டிழுப்பு இல: 3545 | வர்ணம்: இளஞ் சிவப்பு | சீட்டிழுப்பு திகதி: 07.03.2021

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,308,959

வெற்றி இலக்கங்கள்: 14 53 59 71 | ஆங்கில எழுத்து: U

அபிவிருத்தி லொத்தர் சபை — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் 2,000,000/=

திகதி: 07.03.2021 | வெற்றி வாரம்: 3096 | வர்ணம்: ஊதா

வெற்றி இலக்கங்கள்: 08 20 57 62 | மகரம்

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,614,691

### SUPER BALL — சுப்பர் போல்

சீட்டிழுப்பு வாரம்: 1389 | நிறம்: சிவப்பு

சீட்டிழுப்பு திகதி: 07/03/2021 | தினம்: ஞாயிற்றுக்கிழமை

வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: W 13 25 48 64

அடுத்த சுப்பர் ஜக்பொட் 72,829,289/=

அபிவிருத்தி லொத்தர் சபை — தொலைபேசி: 0112 333 546-47

### ஜய சேர

சீட்டிழுப்பு வாரம்: 699 | வர்ணம்: மஞ்சள் | திகதி: 07.03.2021 | ஞாயிறு

K 22 38 55 63

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,892,385

தொ.பே: 0112 333 546/47 | Web: www.dlb.lk

## இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக்குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (6038)

**U.S.A பாம்**
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
**077 868 9500**

## வேலைவாய்ப்பு!

**GRAPHIC DESIGNER**
**(கிராபிக் டிசைனர்)**

தகைமைகள்:
- Photoshop, Illustrator, Corel Draw, Indesign போன்ற மென்பொருட்களில் திறன் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
- முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

Indesign மென்பொருளில் (புத்தக வேலைகள்) அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**MARKETING EXECUTIVE**
**(விற்பனை உதவியாளர்)**

தகைமைகள்: (6046)
- A/L சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
- முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**WE NEED WEBSITE & FACEBOOK MAINTAINER**

புதன்கிழமை (10.03.2021) காலை 9.30 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நேர்முக தேர்வு நடைபெறும்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:
ANDRA ADVERTISING (PVT) LTD.
379, Kasthuriyar Road, Jaffna.
0776622981 | 0777481696

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கு, இராசபாத வீதியில் மெயின் றோட்டுடன் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (6054)
**1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.**
(இராச வீதிச் சந்தியில் இருந்து 100 மீற்றர் தூரம்.)
**குரு - 077 468 3354, 077 288 0152**

## காணி விற்பனைக்கு

யாழ்.கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)
பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடை தூரம்
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தேவையில்லை) (6064)
**077 596 3845**
**076 640 0974**

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- **021 222 6113**

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- **021 222 3536**

**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- **076 443 1576** (C-1619)

தமிழ் மொழியும் இலக்கியமும்
தரம் 6 - 11 வரை
தமிழ் இலக்கிய நயம்
தரம் 10, 11

**ஆசிரியர் : தமிழ்ச்சுடர் திரு க.மு.நித்தி**

- வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
- புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர்.

கே.கே.எஸ் றோட், தாவடிச் சந்தி, கோண்டாவில்.
**077 105 1015**

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

TVS wego (BFR)
மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. (6067)
**077 898 9691**
(யாழ்ப்பாணம்)

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1049)
0768226240 DHL


**அண்ணா** EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள் (C-1548)
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை.
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



(6066)

## அப்பாத்துரை சாம்பசிவம்

**(முன்னாள் சீமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)**

**தோற்றம் - 24.12.1926** **மறைவு - 09.02.2021**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை (ஐயனார் கோயிலடி) மற்றும் நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை சாம்பசிவம் கடந்த 09.02.2021 அன்று வத்தளையில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் இறந்த செய்திகேட்டு நேரிலும் தொலைபேசியிலும் தொடர்புகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும்எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். நாளை (09.03.2021) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலையில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்று 11.03.2021 ஆம் திகதி வியாழக்கிழமை வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் திருமண மண்டபத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல் : மகன் - சா.ஜனகன் (கனடா) 001416579759 4**
**மகள் - ர.கௌதமி (ஜேர்மனி) 004915144938415**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.